பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர் 19 பங்குனி 20 ரபி ஆகிர் 12 இதழ்- 51
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 2-4-77

# ஆயுர்வேத சத்தியாக்கிரகத்தில் அரசியல் கட்சிகள் அக்கறை!

யாழ்ப்பாணம், சனி

சித்தஆயுர்வேத வைத்தியக்கல்லூரி மாணவர்களின் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இப்போது சகல அரசியல் கட்சிகளும் அக்கறைகாட்டத்தொடங்கியுள்ளன. விஷயம் என்னவென்றே தெரிந்துகொள்ளாமல் இப்பொழுதுள்ள சூழ்நிலையைப் பயனபடுத்துவதற்கு முனைவது வேடிக்கையாக இருக்கிறதென்று ஆயுர்வேத வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

மருத்துவத்துறையில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் சித்த ஆயுள்வேத வைத்தியக்கல்லூரியைப் பற்றிக் கவலைப்படாமல் தென்னிலங்கையில் ஆயுர்வேதக் கல்லூரிகளுக்கு மான்யம் வழங்கி ஊக்கமளிக்கிறதென்றும் இது வகுப்புவாத நடவடிக்கையென்றும் தமிழர் சுயாட்சிக்கழகம் கண்டித்திருப்புதுடன் சித்தஆயுர்வேத வைத்தியக்கல்லூரி மாணவர்களின் நியாயமான சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு விரைவில் முடிவு காணவேண்டுமென்றும் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இத் தகவலைக் கழகத்தின் செயலாளர் திரு. செ. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

## சங்கம் ஆராய்ந்தது

அகில இலங்கைச் சித்த டி. ஏ. எம். எஸ். பட்டதாரிகள் சங்கத்தின் விசேடகூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் ஆயுர்வேத மாணவரின் கைதடிச் சத்தியாக்கிரகம் பற்றி ஆராயப்பட்டது. இது பற்றிச் சங்கச்செயலாளர் டாக்டர் மருதையினார் அறிக்கை விடுவதற்கும் கூட்டம் அதிகாரமளித்தது.

## கண்டனம்

போராட்டம் நடத்தும் வைத்திய மாணவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு கைதடியில் அமைந்திருக்கும் சகல வசதிகளைக் கொண்ட கட்டிடத்தைக் கல்லூரி மாணவர்கள் பாவிப்ப

(8ம் பக்கம் பார்க்க)

# மொரார்ஜியை எம். ஜி. ஆர். புதுடில்லியில் சந்தித்தார்!

## தி.மு.க.மீதான வழக்குபற்றி யோசிப்பதாகபிரதமர்தகவல்

புதுடில்லி, ஏப்ரல் 1

**அனைத்திந்திய அ. தி. மு. க. தலைவர் நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை இன்று புதுடில்லியில் சந்தித்துப்பேசினர்.**

அரசுக்கு ஆதரவு கொடுப்பது சம்பந்தமாக இவர் பேசியதாகத் தெரிகிறது.

ஹிந்தி மொழி இல்லாத் மாநிலங்களில் ஹிந்தி திணிக்கப்படமாட்டாது என்று பிரதமர் மொரார்ஜிதேசாய் உறுதியளித்திருப்பதாக திரு. எம். ஜி. இராமச்சந்திரன் பின்னர் பத்திரிகையாளரிடம் பேசுகையில் தெரிவித்தார்.

ஆயினும் எப்பொழுதாவது ஒருநாள் ஹிந்தி தேசிய மொழியாகத் திகழும் என்று பிரதமர் கூறியதாகவும் அவ்விதம் ஹிந்திமொழி தேசிய மொழியாக வரும்போது நாட்டில் பெரும்பாலானோர் ஹிந்தியை கற்றிருப்பார்கள் என்று பிரதமர் மொரார்ஜிநம்பிக்கை தெரிவித்ததாகவும் எம். ஜி. இராமச்சந்திரன் கூறினர்.

### லோக்சபையில்

இன்று லோகசபை கூடிப் பல பிரச்னைகள் குறித்து ஆராய்ந்தது. தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. மு. கருணாநிதிக்கும் மற்றும் சில அமைச்சர்களுக்கும் எதிராக விசாரணை நடத்திய சர்க்காரியாக் கமிஷன் முன்னைய மத்தியஅரசிடம் சமர்ப்பித்திருந்த முதலாவது அறிக்கையை சபையில் சமர்ப்பித்த போது பிரதமர் மொரார்ஜி தேசாய் இந்த விவகாரம் குறித்துப் பேசினார்.

சர்க்காரியா கமிஷனின் அறிக்கையை அரசு ஆராய்வதாகவும் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு யோசித்துவருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

சர்க்காரியா கமிஷன் சமர்ப்பித்துள்ள முதலாது அறிக்கையில் 7 குற்றச்சாட்டுகள் பற்றிய விளக்கம் இருக்கிறது. இவற்றில் ஆறு குற்றச்சாட்டுக்கள் ஓரளவு அல்லது முழு அளவு நிரூபிக்கப்பட்டுள்ளன. என்றும் இது குறித்து பேசப்பட்டபோது கூறப்பட்டது.

மேல் நடவடிக்கையின் பொருட்டு தமிழ்நாடு மாநில அரசுக்கு இந்தஅறிக்கைஅனுப்பப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார்.

### உள்நாட்டுபெண்களிடம் மன்னிப்புக்கேட்க பிரதமர் மறுப்பு

பெண்கள் பற்றி பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய்வெளிநாட்டுப்பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியில் கூறியிருந்த கருத்துக்கள் பெண் சமுதாயத்தை அவமதிப்பதாக இருப்பதாகவும், பிரதமர் இது குறித்து மன்னிப்புக் கேட்க வேண்டும் என்றும் பெண் உறுப்பினர் ஒருவர் பிரச்னை கிளப்பினர். ஏற்கனவே இது சம்பந்தமாக அந்நியநாட்டுப் பெண்களிடம் தாம் மன்னிப்புக்கேட்டுவிட்டதாகவும், தற்போது உள்நாட்டுப்பெண்களிடம் மன்னிப்புக் கேட்கமுடியாதென்றும் பிரதமர் மொரார்ஜிதேசாய் கூறிவிட்டார்.

### பெண்உறுப்பினர்கள் வெளிநடப்பு

இச்சந்தர்ப்பத்தில் காங்கிரஸ் பெண் உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

பெண்களை அரசியலில் புகுத்

(8- ம் பக்கம் பார்க்க)

## சோஷலிஸஆட்சிஅமைக்க மக்கள் வழிகோலவேண்டும்
### ஆட்சிமன்றக் குழுக்கூட்டத்தில் கோரிக்கை

கொழும்பு, வெள்ளி லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியன ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து அரசுக்கு எதிராகமேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு கொழும்பில் நடைபெற்ற ஆட்சிமன்றக்குழுக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

கடந்தகால வேலைநிறுத்தங்கள் போன்று மேலும் இம்மூன்று கட்சிகளும் வேலைநிறுத்தங்களை மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்காத வகையில், சோஷலிஸ அரசாங்கம் ஒன்றை அமைக்க சுதந்திரக் கட்சிக்கு ஆதரவளிக்க வேண்டும் என்று பொதுமக்களைக்கோரும் தீர்மானம் ஒன்றும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் பேசிய பிரதமர் கூறியதாவது:

"இந்தியத் தேர்தல் முடிவுகள் போல் இங்கும் நடைபெறலாம் எனச் சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள் ஏனோ தெரியவில்லை. பாகிஸ்தான் அரசும் கட்சி வெற்றியீட்டி இங்கு எவரும் கருத்துத் தெரிவிக்கவில்லை. எனினும் நாம் இந்தியத்தேர்தல் முடிவுகளைக் கண்டு பயப்படவில்லை"

மேலும் பல பொருட்களின் விலைகளைக் குறைப்பது பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரிகிறது.

எதிர்வரும் தேர்தல் நடவடிக்கைகள் குறித்தும் சுதந்திரக்கட்சியின் தொகுதிஅமைப்பாளர்கள் நியமனம் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதாம். (ம-இ)

## மே 17-ம் திகதி ஆட்சிமன்றம் கலைக்கப்படும்?

கொழும்பு, வெள்ளி

ஆட்சிமன்றம் வருகிற மாதம் 17-ம் திகதி கலைக்கப்படலாம் என்று அரசியல்வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது. மே மாதம் 19-ம் திகதி பேரவை கூடுவதற்குமுன்னர் ஆட்சிமன்றத்தைக் கலைப்பதற்கு அரசு ஆலோசனை செய்துவருவதாகத் தெரிகிறது.

சாஸ்திர முறைப்படி 17-ம் திகதி பிரதமருக்கு நல்ல நாள் என்று கருதப்படுவதால் இத் திகதியில் ஆட்சிமன்றம் கலைக்கப்படலாம் என்றும் ஜூலையில் தேர்தல் நடைபெறும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஆ)

யாழ். மாநகர ப.நோ.கூ.ச.

## சங்கத்தின் முன் 4-ம்தேதி சத்தியாக்கிரகம்!
### சுதந்திரக் கட்சி வா.மு.ஏற்பாடு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மாநகர ப. நோ. கூ. சங்க நிர்வாகத்துக்கு எதிராக இம்மாதம் 4ம் திகதி சங்கத்தின்முன்னல் சத்தியாக்கிரகம் நடைபெறுமென்று சிறிலங்கா சுதந்திரக்கட்சி வாலிப முன்னணிஎன்றபெயரில்வெளிவந்த செய்தியை (ஈழநாடு அல்ல) மற்றுமொரு சிறிலங்கா சுதந்திரக்கட்சி வாலிபமுன்னணியின் யாழ்ப்பாணக் கிளை மறுத்துள்ளது.

இம்முன்னணியின் அமைப்பாளராகவும் தலைவராகவும் வி. இ.ஸ்ரீபன் என்பவர்இருப்பதாகவும், இவரைத்தவிர வேறுசிலர் முன்னணியின்பெயரில் இயங்கி, இச்சங்கத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்த முனைவதாகவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளர்களான திரு. ம. எஸ். பேரின்பநாயகமும், சட்டத்தரணி எஸ். எஸ். பிரான்சிசும் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளனர்.

அதே வேளையில் வி. இ. ஸ்ரீபன் என்பவரிடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள அறிக்கையொன்றில்சிறிலங்கா வாலிபமுன்னணியின் யாழ். கிளைத்தலைவராகத்தாம் செயலாற்றுவதாகவும், இந்த முன்னணிசத்தியாக்கிரகம்தொடர்பாக எதுவித தீர்மானமும் எடுக்கவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

இது இப்படியிருக்கஇலங்கை கூட்டுறவு ஊழியர் சம்மேளன யாழ்ப்பாணக்கிளை 7 கோரிக்கைகளை முன் வைத்து இம் மாதம் 7ந் திகதி முதல் வேலைநிறுத்தம் செய்யவுள்ளதாக மேற்படி சங்கத்தலைவர் திரு. சு. சண்முகராசா பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வண்ணை சிவன் கோவில் தேர் உற்சவம்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமிகோவில் தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. (ஆ)

புதுவருடப்பிறப்பு, உயிர்த்த ஞாயிறு ஆகிய பண்டிகைப் பெருநாட்களில் இவ்வித நடவடிக்கை மூலம் பாவனையாளர்களை பாதிப்படையச் செய்ய

(8-ம் பக்கம் பார்க்க)

# விளம்பரம்

## தேவை

நேர்மையும் திறமையும் உள்ள றேடியோ மெக்கானிக் உடனடியாகத் தேவை. 3-1-77 நண்பகல் 12 மணிக்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும். றேடியோ ஸ்பெஷலிஸ்ட், 12, யுபிலி பஜார், (ராணி சினிமா அருகாமையில்) யாழ்ப்பாணம். 5833

ஒழுக்கமும் பண்பும் உள்ளவரும் 40 வயதுக்கு மேற்பட்டவரும் வீட்டிலேயே தங்கி வீட்டுவேலைகளிலும் உதவி செய்யக்கூடியவருமான கார் சாரதி உடனே தேவை. மெக்கானிக் அனுபவம் உள்ளவராக இருந்தால் விரும்பத்தக்கது. நற்சான்றிதழ்களுடன் எதிர் பார்க்கும் சம்பளத்தைக் குறித்து விண்ணப்பிக்கவும். 484, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 5824

பாம்கோட் ஹோட்டலுக்கு உதவி மனேச்சர்/பண்டகசாலை பொறுப்பாளர் தேவை. வயது ஏறக்குறைய45. பிணைப்பணம் ரூபா 2500/-. ஹோட்டல் அல்லது உணவு பரிமாறலில் முன் அனுபவமுள்ளவர்கள் சொந்த கையெழுத்தில், ஆங்கிலத்தில் எழுதி விண்ணப்பிக்கவும். ஒட்டோஸ் லிமிட்டெட், 190, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5817

## விற்பனைக்கு

பாவனையிலுள்ள 2 சில்லு குபோட்டா ரர்க்ரர் (76 ஸ்ரீ 196) கலப்பை, பெட்டி, நீர் இறைக்கும் பம் ஆகியவற்றுடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 10,000/-. பண்டமாற்றுக பாவிக்கும் நீர் இறைக்கும் இயந்திரம், மருந்து தெளி யந்திரம், ஆகியனவும் மாற்றலாம். விபரங்களுக்கு; சுவேந்திரன் சலூன், பஸ்நிலையம், அச்சுவேலி. 5834

நல்ல நிலைமையிலுள்ள 'ஹொண்டா' (HONDA) 125 C C மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. ஸ்ரார் ரேணிங்வேக்ஸ்,233,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 5830

## காணவில்லை

பெறுமதியான உடுப்புகளும் முக்கியகடிதங்களும் புகைப்படங்களும் கொண்ட சூட்கேஸ் 31-3-77வியாழக்கிழமை கொழும்பு - காங்கேசன்துறை தபால் ரயிலில் கொடிகாமத்திற்கும் காங்கேசன்துறைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ். ஆயர் இல்லத்தில் (Bishops House- Phone-261) தகவல் தந்தால் சன்மானம் வழங்கப்படும். 3907


## இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம்

## இராமநாதன் நுண்கலைக் கல்லூரி இசை நடனத் துறைகளில் டிப்ளோமா நெறியைப் பயில்வதற்கான அனுமதி - 1977

மேற்குறித்த கல்வி நெறியைப் பயில அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் 1977 ஏப்பிரல் 25ஆந் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவங்களும், மேலதிக விபரங்களும் 9'' X 4'' அளவினதான உங்கள் முகவரி கொண்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித மேலுறையைச் சிரேட்ட உதவிப் பதிவாளர், தேர்வுகள், என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**மேலதிக பதிவாளர்**
யாழ்ப்பாண வளாகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
31-03-77. 5837

## அறிவித்தல்

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்திற்குச் சேரவேண்டிய சோலைவரி நிலுவைகளை வசூலிக்க நடுக்கட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அடையாள அட்டைகளுடன் நிலுவைகள் வசூலிக்க வரும் இவர்களிடம் வரியிறுப்பாளர்கள் கொடுக்கும் சகல கொடுப்பனவுகளுக்கும் தவறாது உடனே பற்றுச்சீட்டின் மூன்றாவது பிரதியைத் தற்காலிக பற்றுச்சீட்டாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு வாரத்திற்குள் இப்பிரதியின் மூலப் பிரதி கிடைக்காவிடின் இக்காரியாலயத்துடன் தொடர்புகொள்ளவும். மேற்குறிப்பிட்ட பிரகாரம் பற்றுச்சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளாமல் செய்யும் எதுவித கொடுப்பனவுகளுக்கும் இம்மன்றுப் பொறுப்பில்லை என்பதை அறியத் தருகிறேன். நடுக்கட்டு உத்தியோகத்தர்கள் நிலுவைகளை முழுதாகப் பெற மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளனர். பகுதிக் கொடுப்பனவுகளை ஏற்க அவர்களுக்கு அதிகாரமில்லையாதலால், அப்படியான கொடுப்பனவுகள் என்னுடைய உத்தரவுபெற்றபின் இவ்வலுவலகத்தில் மட்டுமே செலுத்தப்படல்வேண்டும்.

**க. சிவஞானம்**
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.
மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
1-4-77. 5841


உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் நள வருஷம் பங்குனி மாதம் 22-ம் நாள் (4-4-77) திங்கட்கிழமை பகல் 9-15 மணி முதல் 10-15 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| எமது புத்திரன் திருவளர் செல்வன் **விஸ்வநாதன்** அவர்களுக்கும் | எமது புத்திரி திருவளர் செல்வி **இரஞ்ஜினி** அவர்களுக்கும் |
|---|---|

மல்லாகம் பழம்பிள்ளையார் கோவிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் சமுகந்தந்து மணமக்களை ஆசிர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

**டாக்டர் இராசேந்திரம் ஜெரிமையாவும் பாரியாரும்**
28, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை. 5800

**செ. இராமலிங்கமும்**
(சட்டத்தரணி)
**பாரியாரும்**
மல்லாகம்.


**இ. சிவசுப்பிரமணியம்,**
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

1973-ம் ஆண்டு
44-ம் இலக்க
நீதி நிருவாகச் சட்டம்
283-ம் பிரிவின் கீழ்
மரணச்சொத்து
நிருவாகத் தத்துவப்பத்திரம்
வழங்குவதற்கான

## இடைக்காலக் கட்டளை

## இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம் கந்தர் மடம் இல. 93/1, இந்து மகளிர் ஒழுங்கையில் வசித்த காலஞ்சென்ற இராசையா நாகராசாவின் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விடயத்தில்

இராசையா நாகராசா கைம்பெண் தங்கேஸ்வரி, இல. 93/1, இந்து மகளிர்ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

விண்ணப்பகாரி

வலயம்: யாழ்ப்பாணம்
இல. 320

எதிர்

1. நாகராசா இந்திரகுமார்
2. நாகராசா கந்தகுமார், இல. 93/1, டிெ இந்து மகளிர் ஒழுங்கை.
   இருவரும் பராயமற்றவர்கள்
3. பொன்னையா குமாரசாமி, பொன்னையா ஒழுங்கை, ஆனைக் கோட்டை.
   பராயமற்றவர்களின் தத்துவகாரன்

பிரதிவாதிகள்

281-ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 3-1-77 திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்தில் இருக்கும் கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டதென திருப்தியடைந்ததின் பெயரில் 8-3-77-ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் எவராவது எதிர்க்காரணம் காட்டினாலன்றி மேற்சொல்லப்பட்ட விண்ணப்பகாரி காலஞ்சென்றவரின் கைம்பெண் என்ற வகையில் அவரின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்குரிய தத்துவப்பத்திரம் பெறுவதற்கு உரிமையுடையவர் எனவும் அவ்வண்ணமே அவருக்குவழங்கப்படுமெனவும்3-ம் எதிர்வாதி 1-ம், 2-ம் எதிர்வாதிகளின் தத்துவகாரன் என இந்த நடவடிக்கைக்கு நியமிக்கப்படுவார் எனவும் யாழ்ப்பாணம் நீதி நிர்வாக வலயத்தின் தத்துவப் பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு இத்தால் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை,**
தத்துவப்பத்திர அதிகாரி.
1977-1-3.
9-3-77

எதிர்க்காரணம் காட்டும் காலம் 28-4-77 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்
**கா. கணபதிப்பிள்ளை.**
5835


## மரங்கள் ஏலவிற்பனை

வண்ணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகோவிலைச் சேர்ந்த வேப்பமரங்களும், நாவல் மரங்களும் மேற்படி கோவில் தோட்டத்தில் நாளை ஞாயிறு மாலை 4-30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**தேவாலய திருப்பணிச்சபை.**
5836


"இளஞ்சந்ததிக்கு

# விளையாட்டுத்துறை உயர்ந்த பண்புகளைப் புகட்டுகிறது"

— மாவட்ட நீதிபதி

மட்டுவில் வெள்ளி

"விளையாட்டு வீரர்களிடம் பண்பு, நேர்மை, கடமை போன்ற உயர்ந்த பண்புகள் மிளிரும்" என்று சாவகச்சேரி வட்டாரப் பாடசாலைகளின் இறுதி விளையாட்டுப்போட்டி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்டிணர் கூறினார்.

மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் மூன்று தினங்களாக நடைபெற்ற இந்த வட்டார விளையாட்டு விழாவில் 32 பாடசாலைகள் கலந்து கொண்டன. இதில் 875 மாணவவிரர்களும், வீராங்கனைகளும் கலந்துகொண்டனர். இந்த விழாவுக்கு சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. கி. இராஜநாயகம் தலைமை தாங்கினார். திரு.கே. பாலகிட்டிணர் தொடர்ந்து கூறியதாவது: இளம் சமுதாயத்திற்கு கல்வி அறிவு மட்டுமல்ல விளையாட்டுத்துறை அறிவும் அத்தியாவசியமாகிறது. விளையாட்டுத்துறை உடல் வளர்ச்சியை மட்டும் கொடுக்கவில்லை. மனிதவாழ்வுக்குத் தேவையான உயர்ந்த பண்புகளையும் போதிக்கிறது. அந்த வாழ்க்கைத் தத்துவத்தின் அடிப்படையில் தமது வாழ்வைமேற் கொள்ளுவதினால் புடம்போட்ட தங்கமாக மனித குலத்தில் உயர்ந்த இடத்தை பெற முடியும்.

வெற்றி கிட்டவில்லை என்பதற்காக சோர்வு, பொறுமை அடைந்துவிடக் கூடாது. இப்பொழுதுதான் ஊக்கம் எழ வேண்டும், வெற்றியீட்டியவரைப் போற்றும் பண்பு வேண்டும்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. இராஜநாயகம் பேசுகையில், இன்று வட்டார ரீதியாக விளையாட்டுக்களில் பங்குபற்றும் மாணவர் அகில இலங்கை ரீதியாக விளையாட்டுக்களில் பங்கெடுத்து, அகில உலக ரீதியான புகழைப்பெற முயற்சிக்க வேண்டும் என்றார். திரு. எஸ். எஸ். முத்தையா பரிசில்களை வழங்கினார்.

விளையாட்டு முடிவில் மட்டுவில் மகாவித்தியாலயம் முதலாம்இடத்தைப்பெற்று, சாம்பியன் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது. மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் 2-ம் இடத்தையும், கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை 3ம் இடத்தையும் பெற்றன.

சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயம், தனித்து பெண்கள் போட்டிகளில் மட்டும் பங்கெடுத்து 4-வது இடத்தைப் பெற்றமைக்கும் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன,

(உ)

# கலாச்சார அமைச்சர் நாளை யாழ். வருகிறார்

## சிவானந்த குருகுலகட்டிட அடிக்கல் நாட்டுவார்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் நீராவியடியில், சிவானந்த குருகுலத்தின புதிய கட்டிட அடிக்கல்லை, கலாச்சார அமைச்சர் திரு. ரி. பி. தென்னக்கோன் நாளைக் காலை நாட்டிவைப்பார்.

அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் திரு. வீ சிவசுப்பிரமணியம் தலைமையில், இந்த அடிக்கல் நாட்டு விழா நடைபெறும்.

இவ்விழாவைத் தொடர்ந்து யாழ். நாவலர் மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். அகில இலங்கை இந்துமாமன்ற உப-தலைவர் திரு. செ. விசாகசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்துவார். பிரம்மஸ்ரீ ப. வித்தியானந்தசர்மா அறிமுகவுரை வழங்குவார்.

திரு. வீ. சிவசுப்பிரமணியத்தின் தலைமையுரையைத் தொடர்ந்து அமைச்சர் ரி. பி. தென்னக்கோன் உரை நிகழ்த்துவார்.

சுகாதார அமைச்சுச் செயலாளர் திரு. கே. எச். எம். சுமதிபாலா, யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி, பிரம்மஸ்ரீ தி. கி. சீதாராமசாஸ்திரிகள், திரு. பொ. அட்சரமூர்த்தி, சிவஸ்ரீ கா. சோமசுந்தரக் குருக்கள், திரு. மு. ஞானப்பிரகாசம், பிரம்மஸ்ரீ கி. லக்ஷ்மணஐயர் ஆயோர் சிறப்புரை வழங்குவார்கள்.

இவ்விழாவில் திரு. சு. விஜயானந்தனின் யோகாசனக் காட்சிகள் இடம் பெறும்.

(க-அ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், சனி

வருமானவரி பற்றிய கருத்தரங்கொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை சென்ரல்திரை அரங்கில் நடைபெறவிருக்கிறது,

திரு. ப. செல்வரத்தினம் தலைமையில் நடைபெறும் இக் கருத்தரங்கில் யாழ்ப்பாண உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தைச் சேர்ந்த திரு.எஸ். கைலாசபதி, யாழ். தத்துவக் கணக்காளர் திரு. அ. சோமசுந்தரம்பிள்ளை ஆகியோர் உரையாற்றுவர். (அ)


**எவர்சில்வர் சமையல் பாத்திரம்**

கிடைக்குமிடம்:
**சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்**
516, ஸ்கின்னேர்ஸ் றோட், தெற்கு
கொழும்பு - 10

## லேத் இயக்குநர் விற்பனையாளர் தேவை

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள லேத் இயக்குநரும் (Lathe man) கொழும்பில் வேலை பார்ப்பதற்கு மும்மொழிகளிலும் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) அனுபவமுள்ள விற்பனையாளரும் (sales man) தேவை.

உடனே நேரில் [illegible]ரவும்.

**சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ்**
நீர்வேலி. 5839

அவசரகால நிலையின்போது

# கொடுமை இழைத்தவர்களை மன்னிக்க முடியாது

## கிருபளானி கூறுகிறார்

புதுடில்லி, ஏப். 1

இந்திய அவசரகால நிலையின்போது கடந்த 20 மாதங்களாக மக்களுக்கும் தலைவர்களுக்கும் இழைக்கப்பட்ட அவமதிப்புக்கள் குறித்து ஆராய உயர் விசாரணைக் கமிட்டி ஒன்று நியமிக்கப்படும் என்று ஆச்சாரியா கிருபளானி தெரிவித்துள்ளார்.

தவறு செய்தவர்கள்மீது வஞ்சம் தீர்க்கப்படமாட்டாது என்பது உண்மைதான். ஆனால் விஷயங்களை மறந்துவிடமுடியாது என்றும் கிருபளானி கூறினார்.

நெருக்கடி நிலையைக் காரணமாக வைத்துக்கொண்டு கொடுமைகளைப் புரிந்தவர்களை மன்னித்து விடுவது என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் அவர் கூறினார். (இ)

## முன்னாள் சட்ட மந்திரியும் ராஜினமா

புதுடில்லி, ஏப்.

இந்திரா அரசாங்கத்தின் முன்னாள் சட்ட மந்திரி திரு. ஏ.கே சென் காங்கிரஸிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார். (இ)

## காலவரையின்றி ஒத்திவைப்பு

புதுடில்லி, ஏப். 1

உத்தரப்பிரதேச சட்டசபையும் மறு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கவர்னரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணைமீது எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த திருத்தப்பிரேரணை தோற்கடிக்கப்பட்டதை அடுத்தே சபை ஒத்திவைக்கப்பட்டது. (இ)

## சர்க்காரியா கமிஷனை வாபஸ் பெறக் கூடாது

### லோகசபையில் கோரிக்கை

புதுடில்லி, ஏப். 1

"நீதித்துறையில் தலையிடுவதில்லையென்ற அரசின் கொள்கைக்கிணங்க தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதிக்கும் அவரது சகாக்களுக்கும் எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரணைசெய்து வரும் சர்க்காரியா கமிஷனை அரசு வாபஸ்பெறமாட்டாதென உறுதியளிக்கவேண்டும்"

இவ்வாறு சென்னை காங்கிரஸ் லோகசபை உறுப்பினர் திரு. வெங்கட்ராமன் நேற்று லோகசபையில் கேட்டுக்கொண்டார்.

"அரசு தமது கொள்கைக்கிணங்க சர்க்காரியா விசாரணைக் கமிஷனின் விசாரணைகளைப் பூர்த்திசெய்யவேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (இ)

## யாழ்வளாகத் தமிழ் மன்றம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத் தமிழ் மன்றத் செயற்குழுவிற்கு நியமனப் பத்திரம் தாக்கல் செய்தோரில் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: நா. தர்மராசா, உப-தலைவர்: ம. சிவதாஸ், செயலாளர்: செ. சண்முகநாதன், உப-செயலாளர்: அ. ஜெ. ச. சவிரிமுத்து, இளம் பொருளாளர்: அ. எல். ஜெபர் சாதிக், பத்திராதிபர்: ச. பேரின்பராஜா.

எஸ். எஸ். ஆர். கொலை முயற்சி

## வழக்கை ரத்து செய்ய

# கருணாநிதி மனு!

(நமது நிருபர் சாந்தா)

எஸ். எஸ். ஆரை கொலை செய்ய முயன்றதாக தொடரப்பட்டுள்ள வழக்கை ரத்து செய்ய வேண்டும் என்று கருணாநிதி மனுத்தாக்கல் செய்துள்ளார்.



தி. மு. கழக தலைமை செயற்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள சென்றபோது தன்னை தாக்கிக் காயப்படுத்தியதாக எஸ். எஸ். ராஜேந்திரன் பொலிசில் புகார் செய்திருந்தார். இதுதொடர்பாக தி. மு. கழக தலைவர் கருணாநிதி மாஜி மந்திரி கண்ணப்பன், ஜி. லட்சுமணன், எம். பி. ராசமாணிக்கம், கோபாலசாமி, செபஸ்டியன் ஆகியோர் மீது முதலாவது அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி முன்னிலையில் வழக்கு நடைபெற்று வருகின்றது.

ஆரம்பத்தில் இந்த வழக்கில் இந்த 6 பேர் உட்பட மொத்தம் 43 பேர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ஆனால் அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி இவர்கள் 6 பேரைத் தவிர 37 பேரையும் வழக்கிலிருந்து விடுவிக்க உத்தரவிட்டார். இந்த தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்திருப்பதாகவும், ஆகவே இன்றைய விசாரணையை ஒத்திவைக்க வேண்டும் என்றும் அரசாங்க தரப்பு விசேஷ வழக்கறிஞர் துரைபதி கோர்ட்டில் கூறினார். இதனால் வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 18-ம திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

கருணாநிதி சரப்பில் ஆஜரான வழக்கறிஞர் பாளையங்கோட்டை சண்முகம் இன்று கோர்ட்டில் 2 மனுக்களை தாக்கல் செய்தார். இந்த வழக்கு விசாரணையை மேற்கொண்டு நடத்தாமல் விசாரணையை ரத்துசெய்யவேண்டுமென்று ஒரு மனுவில் வற்புறுத்தப்பட்டிருந்தது.

### அலவன்ஸ்கொடு

கோர்ட்டுக்கு வந்ததாகக் கருணாநிதி மற்றும் 5 பேருக்கு அலவன்ஸ் தரவேண்டுமென்று 2-வது மனுவில் கூறப்பட்டிருந்தது. இந்தமனுக்கள் மீது அடுத்த மாதம் 15-ம் தேதி விசாரணை நடைபெறும் என்று நீதிபதி சோமசுந்தரம் அறிவித்தார்.

## குஜராத் சட்டசபையில் கூச்சல், குழப்பம்!

### காங்கிரஸ் பலம் இழந்துள்ளதாம்

புதுடில்லி, ஏப் 1

குஜராத் மாநில சட்டசபையில் நேற்று இடம்பெற்ற குழப்பங்களை அடுத்து சபை காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

சட்டசபைக் கூட்டம் நேற்று ஆரம்பமானபோது காங்கிரஸிலிருந்து பல உறுப்பினர்கள் ராஜினமாச் செய்துவிட்டனர் என்றும் இதனால் சபையில் காங்கிரஸின் பலம் குறைந்துவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது தொடர்ந்து தம்மால் சுதந்திரமாகப் பணியாற்றமுடியவில்லை என்று கூறிய தற்காலிக சபாநாயகர் சபையை ஒத்திவைத்தார்.

இதேவேளையில் குஜராத்தில் தொடர்ந்து ஆட்சியை நடத்த போதிய பலம் உண்டா என்று மாநில கவர்னர் முதன் மந்திரியைக் கேட்டுள்ளார்.

## வியட்நாமுக்கு உதவுமாறு இலங்கை கோரிக்கை

லண்டன், ஏப். 1

வியட்நாமுக்கு மூன்றாவது மண்டல நாடுகள் உதவி வழங்கவேண்டும் என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கோரியுள்ளார்.

வியட்நாமுக்கும் லாவோஸுக்கும் நிதியுதவியளிப்பது தொடர்பாக ஆராயும்பொருட்டு பிரேஸிலில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

பதினறு நாடுகளின் பிரதிநிதிகள் இம்மகாநாட்டில் கலந்துகொண்டனர்.

மேற்படி இருநாட்டு மக்களின் புனர்வாழ்வுக்கும் பணம் அளித்து உதவியளிப்பதென இம்மாநாட்டுப் பிரதிநிதிகள் முடிவுசெய்தனர். (உ)

30 ஆண்டுகளின் பின்

# இப்போதுதான் காங்கிரஸ்

## உண்மையை உணர்ந்துள்ளது

### லோகசபையில் சவான்



புதுடில்லி, ஏப். 1

"இந்தியக் காங்கிரஸ் கட்சிமீண்டும் ஒருமுறை அவசரகாலச் சட்டம் பற்றிச் சிந்திக்கவேமாட்டாது" என்று எதிர்க் கட்சித் தலைவர் திரு. வை.பி.சவான் நேற்று லோக சபையில் கூறினார்.

கடந்த 30 ஆண்டுகள் ஆட்சி புரிந்த காங்கிரஸ் இப்போதுதான் உண்மைநிலையை உணர்ந்துள்ளதென்றும் திரு. சவான் கூறினார்.

புதிய அரசாங்கம், கடந்த காலக் கசப்பான சம்பவங்களை மறந்து, நாட்டின் எதிர்கால நன்மைக்காக நற்பணிகளில் ஈடுபடவேண்டுமென்றும் திரு. சவான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார். (இ)

## வானெலி, பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்கும்

### ஜனதா கட்சி கொள்கை விளக்கம்

(நமது நிருபர் சாந்தா)

இந்தியாவில் இன்று ஆட்சிக்கு வந்துள்ள ஜனதா கட்சியின் கொள்கைப் பிரகடனங்களை, தற்காலிக ஜனதிபதி ஜட்டி விளக்கமாக வெளியிட்டுள்ளார்.

மிசா சட்டம் அறவே ஒழிக்கப்படும் என்றும் நீதிமன்றங்கள், வானெலி நிலையங்கள் பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்கும் என்றும் நடுநிலைக் கொள்கையை பாரதம் தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்றும் அவர் கூறினார்.

நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளும் அடங்கிய கூட்டத்தில் அவர் நிகழ்த்திய உரையில் முக்கிய சிலபகுதிகள் இங்கு வருமாறு:

### புதிய அரசு சபதம்

"1975-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் திகதி அவசர நிலை அமுல்படுத்தப்பட்டதற்குப் பின் இழைக்கப்பட்ட அநீதிகளையும் கொடுமைகளையும் களைவது என்று புதிய அரசு சபதம் ஏற்று இருக்கிறது.

கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் சொல்லொணு கொடுமைகளுக்குமக்கள் ஆளானதும், பலர் இதில் மரணம் அடைந்ததும் இதற்கு காரணம் ஆகும்.

நாடாளுமன்றத்துக்கும் மக்களுக்கும், நாடாளுமன்றத்துக்கும் நீதித் துறைக்கும், நாடாளுமன்றத்துக்கும் நிர்வாகத் துறைக்கும் இடையே உறவு முறைகள் சரி செய்யப்படும்.

மிசா சட்டம் அறவே ஒழிக்கப்படும். எந்த ஒரு நிறுவனமும் சரியான ஆதாரமோ, நீதி விசாரணையோ இல்லாமல் தடை செய்யப்படாது.

பத்திரிகைத் தணிக்கை முற்றிலுமாக ரத்து செய்யப்பட்டு ஆட்சேபகரமான செய்திகளைப் பிரசுரிக்கவுள்ள தடைச் சட்டம் நீக்கப்படும்.

### சட்டத்துக்கு முன் அனைவரும் சமம்

சட்டத்துக்குமுன் அனைவரும் சமம் என்றநிலை நாட்டப்பட்டு ஜனதிபதி, பிரதமர், கவர்னர்கள் நீதிமன்ற விசாரணைக்கு அப்பாற்பட்டவர்கள் என்ற சட்டம் ஒழிக்கப்படும்.

உயர்ந்த பதவியில் இருப்பவர்களின் தேர்தல் ஒழுங்கீனங்களை நீதிமன்றம் விசாரிக்கக் கூடாது என்ற தடைச் சட்டம் நீக்கப்படும்.

அகில இந்திய வானெலி

(7-ம் பக்கம் பார்க்க)

தமிழக சட்டசபைத் தேர்தலிலும்

## அ. அ. தி. மு. க. - காங்கிரஸ் கூட்டணி தொடர்ந்து இயங்கும்

### கருப்பையா மூப்பனர் அறிவிப்பு

சென்னை, ஏப். 1

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம்-காங்கிரஸ் - இந்திய கம்யூனிஸ்ட் - முஸ்லிம்லீக் ஆகியவற்றின் கூட்டணி நடைபெற இருக்கும் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலிலும் தொடர்ந்தியங்கும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் திரு. கருப்பையா மூப்பனர் தெரிவித்துள்ளார்.

லோகசபைத் தேர்தலின் போது இக்கட்சிகள் இணைந்து கூட்டணி ஒன்றை அமைத்துக் கொண்டது தெரிந்ததே.

சட்டசபைத்தேர்தல் இக்கூட்டணி தொடர்பாக காங்கிரஸ்கட்சியைப் பொறுத்தவரையில் மாற்றம் எதுவும் இருக்காது என்றும் மற்றைய கட்சிகளில் மாற்றம் இருப்பதாகத் தமக்குத் தெரியவில்லை என்றும் அவர் கூறினார்.

முன்னாள் தி. மு. க. முதல்வர்மீதும் அவரது சகாக்கள் மீதும் சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் சர்க்காரிய கமிஷன் தொடர்ந்தும் சட்டப்படி இயங்கிவரும் என்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறியுள்ளதையும் திரு. மூப்பனர் வரவேற்றுள்ளார். (இ)

### மணிவாக்கு

அன்பு எப்போதும் மன்னித்துவிடும். யாரிடமும் குற்றம் காணுது. உங்கள் கஷ்டங்களைப்பற்றி முணு முணுத்து வாழ்க்கையை வீணடிக்கவேண்டாம். அன்புமிகுந்த தெய்வம் உண்டு துன்பம் அத்தனையும் போக்கிவிடும்.

— சுவாமி ராமதாஸ்

ஈழநாடு
THE EELANADU

# மதுரை மகாநாடு

மதுரையிலே பல சமயத் தலைவர்களின் மகாநாடு காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரியசுவாமிகளின் அருளாசியின்கீழ் இப்போது நடைபெற்று வருவது வரவேற்கத்தக்கதாகும்.

சுவாமிகள் கூறுகிறபடி இன்று மக்களிடையே மத நம்பிக்கையும் தார்மீகப் பண்புகளும் குறைந்துவருகின்றன. பல மதங்களிடையேயும் ஒத்துழைப்புஇல்லை. போட்டா போட்டிகளும், மதப்பூசல்களும் ஏற்பட்டு, பொதுமக்களுக்குப் பெரும் தலையிடிகளாகியுள்ளன.

இதனால்மதங்களே வேண்டாமென்று நினைப்பதுடன், மக்களில் பலரும் கோவில்களுக்கும் வழிபடும் ஸ்தலங்களுக்கும் செல்லாதிருக்கின்றனர். பிரிட்டன் முதலிய மேலைநாடுகளில் பல கிறிஸ்தவாலயங்கள் மூடப்பட்டும் பல விற்கப்பட்டும் வருகின்றனவாம்.

ஒவ்வொரு மதமும் ஏற்பட்டது மக்களை நல்வாழ்வு வாழச்செய்வதுடன், சமூகக் குறைகளை நீக்கி, மக்களை அன்புப்பிணைப்பால் ஒற்றுமைப் படுத்துவதற்காகவும் தான். அந்த நோக்கங்கள் இன்று அநேகமாக மறைந்துவிட்டதுடன் தார்மீகப் பண்புகளும், ஸ்ரீ ஆசார்யசுவாமிகள் கூறுவதுபோல் குறைந்தும் விட்டன.

மதங்களால் மக்களுக்கும் சமூகத்துக்கும் உதவிக்குப் பதிலாக உபத்திரவமே ஏற்படுகின்றன. இந்நிலையில் மக்களின் சமயநம்பிக்கை குறைவதிலும், சமூகத்தில் தார்மீகப் பண்புகள் அருகி வருவதிலும்என்ன வியப்பு?

இந்த அவலநிலையை மாற்றி, பல பல சமயத் தலைவர்களும், மக்களிடையே சமய நம்பிக்கையை ஏற்படுத்தவும் சமூக நன்மைக்காக சமயங்களும் சமய ஸ்தாபனங்களும் ஒத்துழைக்கவும் என்னசெய்யலாம் என்பது பற்றி ஆலோசனை செய்யவும்.மதுரையில் கூடியுள்ள மகாநாடு உருப்படியாக ஏதாவது காரியம் செய்யக்கூடுமாயின் அதுமக்கள் குலத்துக்கே மேலான நன்மை புரிவதாக இருக்கும்.

உதாரணமாக மன்னர்கள் ஆட்சிபுரிந்த காலத்திலே கட்டப்பட்ட கோவில்கள் பலபலஅறங்களைவளர்த்தன. ஒவ்வொரு ஊரிலும் சத்திரங்கள் அமைத்து அன்னதானங்கள் நடைபெற்றுவந்தன யாரும் பட்டினிகிடக்கத் தேவையில்லை. மன்னர்ஆட்சி நீங்கியபின் பல பெருச்சாளிகள் புகுந்துவிட்டன. தர்மங்கள் அழிந்து,சுரண்டல்கள் அதிகரித்தன. கேட்பாரில்லை. மூட்டைப்பூச்சிகள் இருப்பதற்காக வீட்டையேகொளுத்துவதா?

சமூக நன்மைக்காக மீண்டும் ஆலயங்களும் வழிபடும் ஸ்தலங்களும் பயன்படும்படி செய்தால். பல சமயத் தலைவர்களிடையேயும் ஒத்துழைப்பும் பலப்பட்டால் மக்களுக்கும் சமயங்களில் புதிய நம்பிக்கை ஏற்படுவதுடன், தார்மீகப் பண்புகளும் அதிகரித்து நாட்டில் குற்றங்கள் குறையக்கூடும்.

பல மதங்களிடையேயும் போட்டியும் பொறாமையும் மத மாற்றங்களும் இருக்கும்வரை தலைவர்களிடையே எவ்வித பரஸ்பர ஒத்துழைப்புக்கும் வழியில்லை. இதனால் மனம்விட்டுப்பேசி, தப்பெண்ணங்களை நீக்கி, ஒத்துழைக்க இதுவரை இடமில்லாமலிருக்கிறது.

மதமாற்ற எண்ணம் சிறிதுமில்லாதவரும்,எம்மதமும் நன் மதமே என்றபெருநோக்கம் கொண்டவரும் மதுரையில் அம்மாநாட்டை கூட்டியிருப்பதால் பலமதத் தலைவர்களிடையேயும் பழைய தப்பெண்ணங்கள் நீங்கவும், சமூகத்துக்கு மதங்களால் உண்மையில் நல்ல பயன்கிடைத்து,இன்பமே சூழவும், எல்லோரும், வாழவும் திருவருளால் வழி பிறக்குமென்றே நம்புவோம்.

# சிவானந்தகுருகுல அடிக்கல் நாட்டு விழா

ஈழத்திலே, 'வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க'ப் பெரும்பணியாற்றிவரும் சிவானந்த குருகுலத்தின் வரலாற்றிலே மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியொன்று நாளை நடைபெறவுள்ளது. குருகுலத்தின் கட்டிடத்துக்கான அடிக்கல்லை நாட்டித் திருப்பணியைத் தொடக்கி வைக்கவிருக்கிறார்கள் மாண்புமிகு கலாசார அமைச்சர் டி. பி. தென்னக்கோன் அவர்கள். யாழ்ப்பாணம், நீராவியடி கடைச்சாமி ஒழுங்கையில் வள்ளல் திரு. பேரம்பலச்செட்டியார் சுப்பிரமணியன்அவர்களால் மனமுவந்தளிக்கப்பட்ட காணியில் நிகழவிருக்கும் இந்நிகழ்ச்சி சைவாபிமானிகளது கவனத்தைக் கவரவேண்டிய முக்கிய நிகழ்ச்சி என்பதை இங்குகுறிப்பிடுவது அவசியமாகின்றது.

சிவாச்சாரிய மரபை, குருகுலக் கல்வி மூலம் கட்டிவளர்க்கும் நோக்குடன் சுமார் பதினேழாண்டுகளுக்கு முன் திருக்கேதீச்சரத்தில் தொடக்கப்பட்ட சிவானந்த குருகுலம் கேதீச்சுரநாதரின் புனித சூழலில் பத்தாண்டுகட்கு மேல் இயங்கிவந்தது. தெய்வமணம் கமழும் அச்சூழல் 'குருகுலம்' இயங்குவதற்கேற்ற தெய்வீக வரலாற்றுப் புகழ்பெற்றதாக அமைந்தபொழுதும் பயில்வதற்குரிய மாணவர்கள் பெருமளவு வசிக்கும் பிரதேசமாக அமையவில்லை. மிகத் தொலைவிலுள்ள யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலிருந்து வந்து தங்கி நின்று கற்கவேண்டிய சிரமம் மாணவர்களுக்கு இருந்தது.

இதனைஉத்தேசித்து மாணவர்கள் பெருமளவிற் சேர்வதற்கு வசதியாக யாழ்ப்பாணத்திலே குருகுல வகுப்புக்களை நடத்தும் ஒழுங்குகள் மூன்றாண்டுகளுக்கு முன் மேற்கொள்ளப்பட்டன. தகுந்த இடம் தேர்ந்தெடுப்பதில் பெரும் சிரமத்திற்குள்ளான பின்னர் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன எல்லைக்குள் சிலகாலம் வகுப்புக்கள் நடைபெற்றன. ஆயினும் குருகுலத்தின் வளர்ச்சி நோக்கில், சொந்தமாகக் கட்டிடத் தேவையும் சூழலும் உணரப்பட்டுவந்தன. இதற்கான முயற்சியில் சைவாபிமானிகளது ஆதரவை நாடிய வேளையில் வள்ளல் பேரம்பலச் செட்டியார் சுப்பிரமணியன் அவர்கள் கடைச்சாமி ஒழுங்கையில் உள்ள தமது நிலத்தை நன்கொடையாக மனமுவந்தளித்தார்கள். அங்குஅமைந்துள்ள ஸ்ரீ நடேசப் பெருமான் ஆலயத்தைச் சேர்ந்த கட்டிடத்திலே கடந்த ஆடி மாதத்திலிருந்து வகுப்புகள் நடைபெற்று வரலாயின.

செட்டியார் அவர்கள் அளித்த நிலத்தில் புதிய வசதியான கட்டிடம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

மாணவர்கள் தினமும்வீட்டிலிருந்து வந்து கற்றுச்செல்வதோடமையாமல், தங்கியிருந்து கிரியை - ஒழுக்கநெறிகளைப் பேணிக்கொள்வதற்கு ஏற்ற வகையில் விடுதிவசதியுடன் கூடிய விரிவான கல்லூரி அமைப்பு கருத்திற்கொள்ளப்பட்டது.

கடந்த ஆகஸ்ட்மாதம்நடைபெற்ற குருகுலத்தின் இரண்டாவது ஆண்டுப் பெருவிழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்த கலாசார அமைச்சின் செயலாளர் திரு. கே. எச். எம். சுமதிபால அவர்கள் குருகுலத்தின் பணியைப் பாராட்டியதுடன் கட்டிட அமைப்புக்கான நிதியில் கணிசமான பகுதியை அரசு கொடுப்பது சாத்தியமாகும் எனநம்பிக்கைதந்தார். அந்நம்பிக்கையைச் செயல்படுத்துவதற்கு கலாச்சார அமைச்சர் மாண்புமிக டி. பி. தென்னக்கோன் அவர்கள் சம்மதமளித்ததோடு மட்டுமன்றி, கட்டிடப்பணியைத் தொடக்கி வைப்பதற்கான வேண்டுகோளையும் ஏற்றுக்கொண்டார். இவ்வகையில் படிப்படியாக ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி வளர்ந்துவரும் குருகுலத்தின் கட்டிடத்தேவைக்கான மிகுதிப்பணத்தின்பெரும் பகுதியைச் சைவாபிமானிகளிடம் 'குருகுல' நிர்வாகிகள் எதிர்பார்க்கின்றார்கள். அவர்களது நம்பிக்கையைச் சைவப் பெருமக்கள் நிறைவுசெய்வார்கள் என்பதற்கையமில்லை.

நா. சுப்பிரமணியம்
(யாழ்ப்பாண வளாகம்)

# ஆர். என். ஐயா

ஆர். என்? எவர் என்னவாயிருந்தாலென்ன, எனக்குத் தெரிந்தது, நான் கற்றுணர்ந்தது, என மனச்சாட்சி கூறுவது. அதைச்சொல்லவும் எழுதவும் தயங்கேன் என்று ஒருவர் இருக்கிறாரென்றால் அவர் ஆர். என். என்ற தந்தையாரின் முதலெழுத்துக்களில் மறைந்திருக்கும் திரு.நம.சிவப்பிரகாசம்ஐயா அவர்கள்தான்.

ஆஜானுபாகுவான தோற்றம், அன்பு தவழும் முகம், ஆணித்தரமான கணீரென்ற குரல், ஆங்கில உடையிலானும் கம்பீரமான உருவம்,தமிழிலும் ஆங்கிலத்திலும் சமமான புலமை– அதுவும் வெளிநாட்டாராலும் மதிக்கப்பட்டது. இவைதான் திரு. சிவப்பிரகாசம்ஐயா அவர்களின் பெருமைகள்அல்ல.

சமயப்பத்திரிகையாக சுமார் 87 ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் இந்துசாதனத்திற்கும் அதன் ஆங்கில இதழுக்கும் சுமார் 28ஆண்டுகளாக ஆசிரியராகப் பணிபுரிந்திருக்கிறாரே–அதுவே மகத்தான சாதனை. 25 ஆண்டுகள், இரு மொழிகள் என்பதல்லப் பெரிது. இரு மொழிகளில் சமயப் பிரசாரப் பத்திரிகைகளின் ஆசிரியர் என்பதே பெரிது. அப்படித் திருப்பித் திருப்பி எழுத என்னதானிருக்கும்என்கின்ற தயக்கமின்றி அநாயாசமாக அன்றாடப் பிரச்னையையும் தொட்டு ஆழ்ந்த மதக் கருத்துக்களையும் புதைத்து அவர் அன்றுதொட்டு இன்றுவரை எழுதிய ஆசிரியத் தலையங்கங்கள் மணியானவை. சமூகசேவையில் தலைசிறந்தது சமயப் பிரசாரம். இதன் அவசியத்தை - சீர்கெட்டுப்போய்க் கொண்டிருக்கும் சமூகங்களைத்தூக்கிவிடவேண்டிய அரசுகள் இன்றுதான் உணர்கின்றன–சென்ற கால்நூற்றாண்டு காலமாக உணர்ந்து. செயற்பட்ட தீர்க்க திருஷ்டியுள்ள தீரர் இவர்.

தொழிலால் சட்டத்தரணி, ஆனால் விருப்பால் ஒரு சமயத் தொண்டர். படித்த காலத்திலிருந்தே சமயப்பிரசங்கங்கள், தமிழ்மொழித்திறன் கைவந்த இப்பெரியார், அதேதுறையில் இன்றும்அயராதுழைக்கச் செய்யும் தியாகங்கள்பல. வயதில் மூத்தோராயினும் தோற்றத்தில் இளமை; இவரிடம்காணப்படுவதன் இவரீடுபட்டுள்ள பணியின் சீர்மையினால் எனலாம்.

பேச்சாளன், பாட்டெழுதும் பாவலன்,அன்பால் விரோதியையும் கட்டுப்படுத்தும்ஆற்றல் படைத்தோன், இன்மொழியே பேசுபவன், இல்லையென்ற சொல்லையறியான், யாரிடத்தும் பகைமைகொள்ளான், இன்னா செய்யான்,இழிசொல் அறியான், பழிச்சொல் கேளாதவன், தனக்குச் சரியெனப் பட்டதை கூறத் தயங்கான், அரசியலிலும் நேர்மையைக் கடைப்பிடிப்பவன்–இன்னும் கூறலாம் ஆர். என். ஐயா பற்றி.

இன்று ஆசிரியப்பணியில் வெள்ளிவிழக்காணும் இப்பெரியார் பொன்விழாவும், வைரவிழாவும் காண இறையருள் கிட்டுவதாக.

— இ. சங்கர்

# ஜெர்மன் துணைத்தூதரைக் கவர்ந்த கைத்தறி

மட்டுவில், வெள்ளி

சாவகச்சேரியிலுள்ள தனியார்துறை கைத்தறி உற்பத்திகளைப் பார்வையிட்ட ஜெர்மன் சமஷ்டிக் குடியரசின் இலங்கைத் துணைத் தூதுவர் செல்வி ஊர்கலா முல்லரும் ஏனைய ஜெர்மன் பிரதிநிதிகளான டாக்டர் இஞே பெர்லின், திருமதி டாக்டர் பெர்லின் ஆகியோரும் அவற்றைப் பெரிதும் பாராட்டினர்.

சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள திரு நவரத்தினம் என்பவருடைய கைத்தறி நிலையத்திற்கு, இந்த ஜெர்மன் பிரதிநிதிகளை சாவகச்சேரி எம். பி. திரு. வ. ந. நவரத்தினம் அழைத்துச் சென்றார்.

அங்கு உற்பத்திசெய்யப்பட்டிருந்த படுக்கை விரிப்பு, சேலை, துவாய் ஆகிய கைத்தறி உற்பத்திகளைஇவர்கள்பார்வையிட்டனர்.

''இப்படியான உற்பத்திகளை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால், இவற்றிற்கு அங்கு தனி வரவேற்பிருக்கும் என்பது உறுதி. இப்படியான தரமான, அழகான, உறுதியான, பாவிக்கக்கூடிய பொருட்களை அவர்கள் என்றும் மதித்துக் கொள்வனவு செய்வர்'' என்று கூறிய இவர்கள். பெருந்தொகையான படுக்கை விரிப்பு, துவாய், சேலை ஆகியவற்றை விலைக்கு வாங்கினர்.

இவற்றை தமது உறவினர்களுக்கு அன்பளிப்புச் செய்யப் போவதாக இவர்கள் கூறினர். (உ)

......

## அலங்கார உற்சவம்

கல்வியங்காடு, வெள்ளி

நல்லூர்பாணுங்குளமுத்துமாரியம்மன் வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகியுள்ளது.

இவ்வலங்காரத் திருவிழா பதினைந்து தினங்கள் நடைபெறும். இப்பதினைந்து நாட்களும் நல்லை ஞான சம்பந்த ஆதீன பரமாச்சாரிய சுவாமிகள் இராமாயணக் கதாப சங்கம் நிகழ்த்துவார்.

[illegible]-ம் திருவிழாவன்று சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சிறப்பு சொற்பொழிவும் இடம்பெறும். (உ)

## கமத்தொழில் சேவைநிலையம்

நெல்லியடி, வெள்ளி

அம்பன் கமத்தொழில் சேவைநிலையத்தின் தலைவராக புலோலி கிராமசபையின் தலைவர் திரு. வி. சுந்தரலிங்கம் விவசாயக்காணி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இச்சேவைநிலையத்தின் இதர அங்கத்தவர்களாகப் பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருவாளர்கள்: எஸ். கந்தவனம், கே. சேனாதிஐயர், கே. விஜிதம்பி(?), பி. இராமலிங்கம், கே. துரைராசா, கே. பலேந்திரலிங்கம். ஏ. தருமன்.

இவர்களுக்கான நியமனப் பத்திரங்களை கமத்தொழிற் சேவை உதவிப் பணிப்பாளர் திரு. ஜே. செந்தில்நாதன் அம்பன் கமத்தொழில்சேவை நிலையத்திலிவைத்து வழங்கினார். (உ)

...—

## 50-வது ஆண்டு நிறைவு

வேலணை, வெள்ளி

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையின் 50-வது ஆண்டு நிறைவை சிறப்பாகக் கொண்டாடுவதற்கு மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் முடிவு செய்துள்ளது.

1927-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையின் சிறப்புப் பற்றியும் பாடசாலை ஸ்தாபகர் திரு.விஜயரத்தினத்தின் சேவைகள் பற்றிய விபரங்களடங்கிய மலர் ஒன்று வெளியிடுவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (உ)

......

## பருத்தித்துறையில் அ. இ. நகரசபைத் தலைவர்கள்

நெல்லியடி, வெள்ளி

அகில இலங்கை நகரசபைத் தலைவர்களின் கூட்டம் ஒன்று பருத்தித்துறை நகரசபையில் நகரசபைத்தலைவர்கள் சங்கத் தலைவரும், மஸ்கெலியா எம். பி. யுமான திரு.காமினி ஆரியதிலக தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் பின்னர் இங்கு சமுகளித்த நகர சபைத் தலைவர்கள் அனைவருக்கும் பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு [illegible]. நடராசா மதியபோசன விருந்தளித்தார். (அ)

### சட்டத்தைப் பகிஷ்கரிக்கச் சொன்ன

# திரு. தொண்டமானும், திரு. அஸீஸும் அதேசட்டத்தால் பிரஜாஉரிமை பெற்றனர்

## இராஜசிங்கத்திற்கு சிவா - நடேசன் பதில் தருகிருர்

திரு. கே. ரி. இராசசிங்கத்திற்கு.

22-3-77 ஈழநாடு இதழில் வெளிவந்த எனது கருத்துகள் 23-3-77 இதழில் வெளிவந்த தங்கள் கருத்துகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து நீங்கள் குழப்பாமல்இருக்க நான் தங்களுக்கு அன்பான வேண்டுகோள்விடுக்கிறேன்.

தமிழர்கள் "திருவாதவூரன்" "சுந்தரலிங்கம்", "பரமேஸ்வரன்" நான்உட்பட அத்தனை பேரும் தங்களை தமிழன் என நினைக்கவில்லை. சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து தமிழர்களின் அரசியலை பேசுவதற்கு தங்களுக்கு அருகதையில்லை. சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டுவந்த வேளையில் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் அச்சட்டத்தை எதிர்த்து முதல்பேசியவர். அன்று முழுவதும் பேசினுர். இம்மசோதாவை 100 ஆண்டுகள்கழித்துக் கொண்டுவரும்படி தங்கள் கட்சித்தலைவரை வேண்டினுர். தந்தை செல்வாவும் அமரர் ஜி. ஜி. யும் சிங்களச்சட்டம் வந்ததை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆரோக்கியஅரசியலில் "செல்வா", "பொன்னு" பொன் எழுத்துகளால் எழுதப்படுவார்கள். அவர்களின் அரசியல் கருத்து வேறுபாடுகள் உங்களை எப்படிப் பாதிக்கும் என்பது எனக்குப் புரியவில்லை.

தங்கள் கூற்று ...

தவருனவை என்பதை (23-3-77 இதழின் பகுதிகள்) போலியானவை என்பதை 22-3-77 இதழினை வாசித்த பின் புரிந்துகொள்வீர்கள். நேருஜி ஆதரித்தசட்டம், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆதரித்த சட்டம்இதைத்தெளிவாகக் காட்டியுள்ளேன். தங்களிடம்ஒன்றைதெளிவாகக்கேட்கிறேன். நீங்கள் இந்தியாவிலிருந்து 1948-ல் இலங்கை வந்ததாகக் கருதிக்கொண்டு சிந்தியுங்கள். (1) 1972-ல் தங்களை ஒரு அதிகாரி, நீர் இலங்கையின் பிரசையென நிரூபிக்க உமது தந்தையும் தந்தைவழிப்பேரனும் இலங்கையில் பிறந்ததை நிரூபிக்கும்படி கேட்டால் என்ன செய்வீர்? இதைத்தான் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எதிர்த்த சட்டம் ஆதாரம்: கன்சாட் 1948 ஆகஸ்ட் 20-ந்திகதி பக்கம்:1821-1861. வினு (2) நீர் குடும்பமாக ஏழு வருடங்கள் வசித்தை நிரூபிக்கும்படி கேட்டால் உமக்குகஷ்டம் ஏதாவது உண்டா? இது ஜி. ஜி. ஆதரித்த சட்டம் (இந்தியா-பாகிஸ்தானியர் பிரஜா உரிமைச்சட்டம்)

இலங்கை-இந்தியர் காங்கிரஸ், இந்திய பாகிஸ்தானிய பிரஜா உரிமைச் சட்டத்தை பகிஷ்கரிக்க மக்களைத் தூண்டிய அதேவேளையில் இச்சட்டத்தினை பயன்படுத்தி அதன் ... திரு. தொண்ட-

மான், திரு. அசீஸ் ஆகியோர் தங்கள் பிரஜா உரிமையைப் பெற்றனர். இந்திய மக்கள் இந்தியத் தலைவர்களை ஏமாற்றிய கதை தங்களுக்குப் புரிகிறதா?

1949டிசம்பர் 18இலங்கைத் தமிழரசுக்கட்சி திரு.எஸ்.ஜே. வி. யின் தலைமையுரையை தந்த உங்களுக்கு நான் அதே தலைவரின் 1964-ம் ஆண்டு ஆவணி மாதம் நடந்த அதே கட்சியின் தேசிய மகாநாட்டில் ஆற்றிய தலைமையுரையைச் சமர்ப்பிக்கின்றேன் (ஆதாரம்: 13-9-1964 சுதந்திரன்)

### விவாதமேடை

"அன்று 8 லட்சமாயிருந்து இன்று 10 லட்சத்துக்கு மேற்பட்டிருக்கும் ஒரு முழுச்சமுதாயத்தையே குடியுரிமை அறறவர்கள் ஆக்கும் திருப்பணி நிறைவேறியதும் டி. எஸ். சேனநாயகா அரசாங்கம் இந்தியா பாகிஸ்தானியா பிரஜாவுரிமை சட்டம் என ஒரு சட்டம் இயற்றியது. இச்சட்டத்தின் பிரகாரம் ஒரே தொடர்பாக விவாகமாகாத ஒருவர் 7வருடமும் விவாகமானவர் ஒருவர் 10 வருடமும் வாசகாலத் தகைமை காட்டினுல் இவர்கள் மீண்டும் பிரஜைகளாகப்பதிவு செய்துகொள்ளலாம். இவ்வாறு பதிவுக்குடியுரிமைகோரியவர்களின் மனுக்கள் மிகப் பெருந்தொகையில் நிர்வாக வழிகள் மூலம்நிராகரிக்கப்பட்டன. இதன் விளைவாக மனுப்பண்ணியவர்களில் வெறும் 10 சத விகிதத்தினரே குடியுரிமை பெறமுடிந்தது. 90சத விகிதமான மனுக்களும் நிராகரிக்கப்பட்டதற்குக் காரணம் அம்மனுப்பத்திரங்களில் தெரிவித்த தகைமை விபரங்கள் சரியற்றவை, போதாதவை என்பதுவல்ல எழுத்து வாசனையற்ற தோட்டத் தொழிலாளிகள் அவ்விபரங்களை மனுப்பத்திரங்களில் நிரப்பிய நுண்முறைகள் சரியற்றவை என்ற விதண்டாவாதமேயாகும்."

இதைவிடச்சிறந்த ஆதாரம் வேண்டுமா?

படிப்பு வாசனையற்றமக்களை பகிஷ்கரிப்பில் ஈடுபடுத்திய இலங்கை-இந்திய காங்கிரஸ் தலைவர்கள் தங்களின் பிரஜாவுரிமை பெற்றனர். அப்பாவி மக்களுக்கு அவர்கள்மனுக்களை அனுப்ப சட்டநுணுக்கங்களைத் தலைவர்கள் உதவிசெய்திருப்பின் இந்நிலை ஏற்படாது.

எது எப்படியானுலும் தலைவர்களின் இறுதி ஆசை ஒன்றுபட்ட தமிழினம். ஒரு தமிழ்நாடு. இதை உணராதவர்கள் தமிழர் வரலாறு பற்றி பேசவோ எழுதவோ அருகதையில்லை என்பதை நண்பருக்கு அறியத்தருகின்றேன்.

அண்மையில் நடந்த தமிழ்த் தலைவர்கள் ட்ரயல் அட்பார் வழக்கில் அப்பீல் விசாரணையில் ஆஜராக ஜி. ஜி. வந்தபோது (மலேசியாவிலிருந்து) செக்கடித்தெரு சிவசுப்பிரமணிய சுவாமிகோயிலில் திரு. அமிருக்கும் ஜி. ஜி.க்கும் பூசையும் வரவேற்பும் கிடைத்தது. இறுதியாக அவர்பெற்ற இலங்கையின் கடைசி வரவேற்பு அதில் இறுதியில் ஜி. ஜி. யைப் பேச அழைத்தபோ அவர் ஆண்டவன் சந்நிதானத்தில் அரசியல் பேசமறுத்து இரண்டு வரிகளை மட்டும் முழங்கினுர். அதுதான் இது: "தமிழன் ஒற்றுமைப்பட்டுவிட்டான், தமிழன் தலைவணங்கமாட்டான்" என்பதுதான்.

எனவே அமரர் ஜி. ஜி. யின் புனிதத்தன்மையை உணராத நண்பர் இராசசிங்கம் விரைவில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகுமாறு கேட்டுக்கொள்கின்றேன். (க)

---

# காங்கிரஸ் உருவாக்கிய சட்டங்களை ஜனதாவால் மாற்ற முடியுமா?

## இந்திய அரசியலின் இன்றைய நிலை

[தமிழகத்திலிருந்து நமது விசேஷ நிருபர்]

நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் ஜனதா கட்சி மகத்தானவெற்றியீட்டி ஆட்சிக்கு வந்திருப்பதும், தமிழ்நாட்டில் தி. மு. கழகம் பெரும் தோல்வியைத் தழுவி, எம். ஜி. ஆர். அலை வீசத் தொடங்கியிருப்பதும் புதுப்புது மாற்றங்களை இன்று அகில இந்திய ரீதியில் ஏற்படுத்துகிறது.

நாடாளுமன்றத்தில் பத்தொன்பது உறுப்பினர்களைக் கொண்ட அ. இ. அ. தி. மு. கழகம் ஜனதாகட்சி அரசை ஆதரிப்பதுஎன்று முடிவு செய்திருக்கிறது என்று இந்திய உத்தியோக பூர்வமான செய்தி ஸ்தாபனம் 'சமாச்சார்' செய்தி வெளியிட்டதும்—

அ. இ. அ. தி. மு. கழகம், ஜனதா அரசிற்கு நிபந்தனையற்ற ஆதரவு அளிக்குமென்று அகில இந்திய வானொலிச் செய்தி கூறியது.

அது வெளியானதைத் தொடர்ந்து பிரதமர் மொரார்ஜி ஒரு கருத்து வெளியிட்டார். ஜனதா கட்சியை அ. இ. அ. தி. மு. கழகம் ஆதரிக்கும் என்று அவர் கூறினுர்.

"மிகவும் மகிழ்ச்சிகரமான வியப்பை அளிக்கிறது" என்று ஜனதா கட்சியின் மற்றொரு தலைவரும், மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சருமான அத்வாணி கருத்து வெளியிட்டார்.

போடப்பட்ட 'முடிச்சு'கள் இப்படியாகப் பலமானதாக மாறவும் வெவ்வேறு கோணங்களில் செய்திகள் வெளிவரத் தொடங்கின.

அ. இ. அ.தி .மு. கழகம் ஜனதா கட்சியுடன் இணைந்துவிட்டது என்றும், நடக்கப் போகும் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் கூட, இக்கழகம் ஜனதா கட்சியுடன் இணைந்துபோட்டியிடுமென்றும் செய்திகள் வெளிவந்தன. இந்தநிலையில் ஏற்பட்ட குழப்பத்தை தீர்க்க திரு. எம். ஜி. ஆரிடம் கருத்துக்கேட்டபோது "இந்திரா காந்தி அரசு இருந்த போது அ.இ.அ.தி.மு. கழகம் எப்படிச் செயல்பட்டதோ அதே போல்தான் தற்போது இயங்கும். அரசின் முற்போக்குத் திட்டங்கள் அனைத்திற்கும் நாட்டின் நலன்கருதி, அ. இ. அ. தி. மு.கழகம் ஆதரவளிக்கும் மத்தியல் இக்கட்சி, ஆக்கபூர்மான எதிர்க்கட்சியாகவே இயங்கும். இணைப்பு என்பதற்கு இடமில்லை" என்று விளக்கினுர். இதனைத் தொடர்ந்து மற்றுமொரு குழப்பம் உண்டானது. அது மத்திய ரயில்வே அமைச்சர் மது தண்டவதே ஏற்படுத்தியதாகும்.

### இன்னொரு குழப்பம்

"அ. இ. அ. தி.மு. கழகம், ஜனதா அரசை ஆதரிக்கும் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆதரவைக்கொண்டு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெறமுடியும். இதன் மூலம் பழைய சர்வாதிகாரச் சட்டங்களைத் தூக்கிவீசி புதிய சட்டங்களைக் கொண்டுவர முடியும்" என்று ரயில்வே அமைச்சர் முழக்கினுர்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட புதுமாற்றம், அகில இந்திய ரீதியில் அ.இ.அ.தி.மு. கழகத்தின் செல்வாக்கோடு அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துமா? என்று அவதானிகள் யோசித்த அதே நேரத்தில் மற்றுமொரு புதிய மயக்கம் உண்டானது.

இந்திரா அரசு கொண்டு வந்த எந்தச் சட்டத்தையும் மாற்ற; ஏன் இந்தியாவுக்கே புதியஅரசியல் சாசனம்ஒன்றை உருவாக்க ஜனதா கட்சிக்கு முடியுமா?

அரசியல் சட்டத்திருத்தத்தில் 42-வது திருத்தத்தைப் புதிய அரசு ரத்துச் செய்யும் என்று பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறினுர். மூன்றில் இரண்டு பெரும்பான்மைபலம் இப்பொழுது (அ. இ. அ. தி. மு. கழக ஆதரவுடன்) இருப்பதால், எந்தவிதச சங்கடங்களுக்குமே இடமில்லை என்று பிரதமர் விளக்கியதும், முந்திய அரசு கொண்டுவந்த சட்டங்கள் எல்லாமே தவிடு பொடியாகிவிடும் என்று செய்திகள் வெளிவரத்தொடங்கின.

இது நடக்குமா? நாடாளுமன்றத்தின் இன்றைய நிலைப்படி, இது நடக்கமுடியாது. இந்திரா அரசு கொண்டுவந்த எந்தச் சட்டத்தையும் திருத்த உடனடியாக முடியாது!

இந்திய நாடாளுமன்றத்தின் மொத்த அங்கத்தவர்கள் தொகை 542. இதில் ஜனதா கூட்டணியிலுள்ள ஜனசங்கம் 90 அங்கத்தவர்களையும், பாரதியலோக் தளம் 65 உறுப்பினர்களையும், பழைய காங்கிரஸ் 50 உறுப்பினர்களையும்' மற்றும் சோஷலிஸ்ட் கட்சி, உத்கல் காங்கிரஸ் 65 உறுப்பினர்களையும் சேர்த்து மொத்தமாக 270 பேரை (ஜனதா கட்சி) கொண்டிருக்கிறது. இதுதவிர, இக்கட்சிக்கு, நிபந்தனையற்ற ஆதரவுதருவதாக (இணைப்பு இல்லாமல்) அறிவித்திருக்கும் ஜெகஜீவன்ராம் தலைமையிலான ஜனநாயக காங்கிரஸ் 28 பேரும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்கட்சி 22 பேரும், அகாலிதளம் 08 பேரும், மற்றும் சில்லறைக்கட்சியினர் 07 பேரும், ஜனதா ஆதரவுபெற்ற சுயேச்சையாளர்கள் 12 பேரும் உள்ளனர். இதனிடையே அ. இ. அ. தி. மு. கழகத்தின் முற்போக்குத்திட்ட ஆதரவுஜனதா அரசுக்குக் கிடைக்கும் நிலைமை இவ்வாறு இருக்க—

இந்திய அரசியல் சாசனத்தின்படி, ஆட்சிக்குவரும் புதிய அரசாங்கம், பழைய அரசாங்கம் நிறைவேற்றிய சட்டத்தை அகற்றவோ அல்லது திருத்தவோ வேண்டுமானுல், நாடாளுமன்றத்திலும், ராஜ்ய சபையிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறவேண்டும். லோகசபையில் நிறைவேற்றப்படும் எந்த மசோதாவும், ராஜ்யசபையில் நிறைவு பெற்ருல்தான் சட்டமாக முடியும். அரசியல் சாசனம் தொடர்பான மசோதாக்களை ராஜ்யசபை நிறைவேற்றியே ஆகவேண்டும். ஆனுல் இன்றுள்ள கட்சிநிலபரம் ஜனதாவிக்குச் சாதகமாக இல்லை.

ராஜ்ய சபையின் மொத்த உறுப்பினர்கள் தொகை 224 ஆகும். இதில் காங்கிரஸ்கட்சி 162. ஜனதா கூட்டணிக்கு 18 ஆகும் காலியாக உள்ள இடங்கள் 19. இந்தக் காலியான 19 இடங்களுக்கும் ஜனதா கட்சியினரே தேர்ந்தெடுக்கப்பட்டாலும், ஜனதாவின்பலம் 37 ஆகத்தான் உயர முடியும். ஆகதே முந்திய அரசு நிறைவேற்றிய சட்டங்களைத் திருத்தவோ அல்லது ரத்துச்செய்யவோ ஜனதா கட்சி அரசுக்கு உடனடியாக முடியாது.

1971-ம் ஆண்டுக்கு முன்னர் காங்கிரஸ்கட்சி ஆட்சியில், மன்னர் மானிய ஒழிப்பு மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது ராஜ்ய சபையில் (பெரும்பான்மையில்லாததால்) தோல்விகண்டுவிட்டது. இதனுல்தான் இந்திரா காந்தி 1972-ம் ஆண்டு நடைபெறவேண்டிய தேர்தலை 1971-ம் ஆண்டே நடத்திப் பெரும்பான்மைப் பலம் பெற்ருர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்றுள்ளநிலையில் ஜனதா கட்சி, ராஜ்ய சபையிலும் பெரும்பான்மைப்பலம் பெறுவதானுல் சட்டசபைத் தேர்தல்கள் மளமளவென நடைபெற வேண்டும். அதிலும் இதற்கு ஆதரவு கிடைக்கவேண்டும். அப்பொழுதுதான் எந்தச் சட்டத்தையும் திருத்தவோ, புகுத்தவோ, நீக்கவோ முடியும். இதுதான் இன்றையநிலை.

---

### பக்தர்களுக்கு அன்னதானம்

சுழிபுரம், சுவி பண்ணுகம் விசலந்தன் முருகமூர்த்தி கோயில் தீர்த்த திருவிழாவான நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் ஸ்ரீ முருகன் அன்னதான சபையினரால் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (உ)

# ‘கிராமப்புற மாணவர்கள் பட்டினத்தைநாடுவதுஏன்?’

## பாடசாலை அதிபர் கவலை

சாவகச்சேரி, வெள்ளி

‘புதிய கல்வித் திட்டத்தின் கீழ் கிராமப்புற பாடசாலைகளின் வளர்ச்சியில் அரசினர் கூடிய சிரத்தைகாட்டி வருகின்றனர். இதேவேளையில் பெற்றோரும் போதிய ஊக்கம் செலுத்திவந்தால் நமது பாடசாலை இன்னும் முன்னேற நம் பிள்ளைகள் கல்வியில் உயர்வடைய ஏதுவாகும்’ என்று மட்டுவில் தெற்கு சரஸ்வதிவித்தியாலயப் பெற்றோர் ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் சங்கத்தலைவரும் வித்தியாலய அதிபருமான திரு. ஆ. செல்லையா பேசுகையில் கூறினார்.

வித்தியாலய கந்தையா மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. செல்லையா மேலும் பேசும்போது ‘கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி போதிய அளவு வளர்ந்துவருகின்றது. அரசினர் அக்கறைகாட்டி வருகின்றனர் என்பதையுணராத சிலபெற்றோர் தம் பிள்ளைகளை நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு அனுப்புவதால்விடாப்பிடியாக இருக்கின்றனர். இதனால்கிராமப்புறப் பாடசாலை வளர்ச்சியடையாமல் இடையில்மங்கிப் போகும்நிலை ஏற்பட்டுவிடுகின்றது’ என்றார்.

புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்; அதிபர் ஆ. செல்லையா, உபதலைவர்: தி. பொன்னுச்சாமி, செயலாளர், ச. முத்துலிங்கம், உபசெயலாளர்: ச. சகாசிவம், பொருளாளர்: திருமதி ச. பரராசசிங்கம், உப பொருளாளர் திரு. க. சி, சுப்பிரமணியம், 9 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினரும் கணக்குப் பரிசோதகர்கள் மூவரும் தெரிவுசெய்யப்பட்டனர். (உ)

### ஆலய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், சனி

புளியம்பொக்கணை நாகதம்பிரான் சிவன்கோவில் பரிபாலனசபையின் புதுவருட உறுப்பினர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்: சிவமணி வீ. ஆனந்தசங்கரி எம். பி., திரு. செ. யோகநாதன் உதவி அரசாங்க அதிபர், தலைவர்: திரு: வே. அருணாசலம் (வீரசிங்கம்), உபதலைவர்கள்: திரு. எஸ். கதிர்காமர். திரு. நா. ஐங்கரப்பிள்ளை, பொதுச்செயலாளர்: திரு. ஆர். ரி. சுப்பிரமணியம், துணைச்செயலாளர்: திரு. க. வைரமுத்து, பொருளாளர்: திரு. சி. பாலசுப்பிரமணியம்.

21 பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது. (அ)

......

### பிரேரணை ஒத்திவைப்பு

பண்டத்தரிப்பு, வெள்ளி

தற்போது இருநேரப் பாடசாலையாக இயங்கிவரும் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியை காலை 8 மணிதொடக்கம் பிற்பகல் 2 மணிவரை இயங்கும் ஒரு நேரப்பாடசாலையாக மாற்றவேண்டும் என்ற பிரேரணை ஒன்று மேற்படி கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இதுபற்றிய இறுதி முடிவு எடுக்கும் தீர்மானம் பிறிதோர் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கல்லூரி அதிபரும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தலைவருமான திரு. வி. நாகராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வேறு பல முக்கிய தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

புதுவருட நிர்வாகிகள் தெரிவின் போது பின்வருவோர் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்:-திரு.வி. நாகராஜா உபதலைவர்;-. திரு.த. அருளானந்தம், செயலாளர்:-திரு.இ. இராமச்சந்திரன. பொருளாளர்;-வே.சின்னராசா 11உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. (உ)

## மானிப்பாய் இந்து பாட்மின்டன் சாம்பியன்

யாழ்ப்பாணம், சனி

யாழ். வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தால் வடமாகாண ரீதியில் நடாத்தப்பெற்ற மாணவர்களுக்கிடையிலான பாட்மின்ரன் சுற்றுப் போட்டியில், மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவர்கள் மூன்று பிரிவுகளிலும் சாம்பியன் பட்டத்தைப் பெற்றுப் பலரது பாராட்டுகளையும் பெற்றுக் கொண்டனர். பகிரங்க சுற்றுப் போட்டியில் இருவர் ஆட்டத்தில் கலந்துகொண்ட செல்வன் எஸ். ரகுவரன் கடந்த வருட சாம்பியன்களை அரைஇறுதிப் போட்டியில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இறுதி ஆட்டத்தில் செல்வன் ரகுவரன் ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றும் ஒரு சில புள்ளிகளால் ‘றணரப்பாக’ தேர்ந்தெடுக்கப்பட்டார்.

14 வயதுக்குட்பட்டோர் (தனிஆட்டம்): சாம்பியன்- இ. சிவகுமாரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி), றணரப்- எஸ். திருக்குமாரன் (பாரியோவான் கல்லூரி)

16 வயதுக்குட்பட்டோர் (தனிஆட்டம்): சாம்பியன்- அ. விஜயரத்தினம் (மானிப்பாய் இந்துக் கல்லூரி). றணரப்- செ. மித்திரன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி)

16 வயதுக்குட்பட்டோர் (இருவர் ஆட்டம்)சாம்பியன்- செ. மித்திரன், அ. விஜயரத்தினம்.

றணரப்-எஸ். வி. ஜெயசந்திரன், கு. பிரதீப்குமார் (மானிப்பாய் இந்துக்கல்லூரி)

18 வயதுக்குட்பட்டோர் [தனிஆட்டம்]: சாம்பியன்- செ. மித்திரன்.. றணரப்- அ. விஜயரததினம் [மானிப்பாய் இந்துக் கல்லூரி]

18 வயதுக்குட்பட்டோர் [இருவர் ஆட்டம்: சாம்பியன்- செ. மித்திரன், அ. விஜயரத்தினம்.

றணரப்: எஸ். வி. ஜெயச்சந்திரன், கு. பிரதீப்குமார் [மானிப்பாய் இந்துக்கல்லூரி] [அ

# உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ்ப்பாணம், சனி

விளையாட்டு அமைச்சின் ஆதரவில் கோப்பாய் உதவி அரசாங்கஅதிபர்பிரிவின்உதைபந்தாட்ட இறுதிப் போட்டி நாளை பிற்பகல் புத்தூர்வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளும் கோஷ்டிகள் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகமும், ஆவரங்கால் சர்வோதய விளையாட்டுக்கழகமும் ஆகும். இவ்வருட உதைபந்தாட்டப் போட்டியில் 13 கழகங்கள் கலந்துகொண்டன.

மேற்படிஇறுதிப்போட்டிக்கு அச்சுவேலி ப. நோ. கூ.சங்கத்தலைவர் டாக்டர் எஸ். பாலகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவிருக்கிறார்.

இப்பிரிவின் கரபந்தாட்ட சாம்பியன்களாக அச்சுவேலி விக்னேஸ்வரா ‘ஏ’ பிரிவினர் திகழ்கின்றனர். ‘எல்லே’விளையாட்டுப்போட்டியில் முதலிடம் பெறுபவர்கள் ஆவரங்கால் ஐக்கியவிளையாட்டுக்கழக கோஷ்டிவீரர்கள். இவர்கள் இவ்வருடம் மாகாணங்களுக்கு இடையில் இடம்பெறவிருக்கும் மாபெரும்போட்டிக்குத்தம்மை தயார்படுத்தும் வண்ணம் கோப்பாய்ப்பகுதி விளையாட்டு அதிகாரி திரு. எஸ். மரியதாஸ் பயிற்சி வகுப்புகளை நடாத்துவதற்கு துரித ஏற்பாடு மேற்கொண்டுள்ளார்.

கோப்பாய்த் தொகுதியில் கிராமசேவகர்கள் பிரிவுகளுக்கிடையேயான மெய்வல்லுநர் போட்டி இம்மாதம் 23ம்,24ம் திகதிகளில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில்நடைபெறவிருக்கிறது.

## மின்கம்பத் திருட்டு வழக்கில் எதிரிவிடுதலை

மட்டுவில், வெள்ளி

வல்வெட்டித்துறை நகரசபைக்குச் சொந்தமான மின்சாரக் கம்பம் ஒன்றைத் திருடியதாக, வல்வெட்டித்துறை பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதவான் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இந்த வழக்கில் வல்வெட்டித்துறை நகரசபைக்குச் சொந்தமான 150 ரூபாபெறுமதியான மின்சாரக் கம்பம் ஒன்றை அதே ஊரைச் சேர்ந்த சோதி அருணாசலம் என்பவர் திருடியதாக வல்வெட்டித்துறை பொலிசார் குற்றம் சாட்டியிருந்தனர்.

பருத்தித்துறை நீதவான் திரு. அ. கங்காதரம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது எதிரி தரப்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம், சட்டத்தரணிகள் வி. செல்லத்தம்பி, யோகசிகாமணி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். [உ]

### பரீட்சை ஆள்மாறாட்ட வழக்கு ஒத்திவைப்பு

கல்வியங்காடு, வெள்ளி

1976-ம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) பரீட்சையின் போது ஆள்மாறாட்டம் செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட கல்வியங்காட்டைச் சேர்ந்த இளைஞர்கள் மீதான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஜூலை 6ந்-திகதிக்கு மேல்விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

இவ்வழக்கில் கல்வியங்காட்டைச் சேர்ந்த எஸ். துரைரத்தினம் என்ற இளைஞர் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் பரீட்சை எழுதும்பொருட்டு பரீட்சை மண்டபத்தில் இருந்தபோது இரகசியப் பொலிசார் ஆள்மாறாட்டம் செய்தார் என்ற சந்தேகத்தில் அவரைக் கைது செய்ததும் இது சம்பந்தமாக ஒரு ஸ்ருடியோ சீல் வைக்கப்பட்டதும் தெரிந்ததே. (அ)

## “மழைநீரைத் தேக்கினால் நீர்ப்பஞ்சம் வராது”

நீர்வேலி, வெள்ளி

“மழை நீரைத் தேக்கினால் வட பகுதி விவசாயிகளுக்குத் தேவையான நீரை உபயோகிக்கலாம்” என்று வலி கிழக்கு தென்பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் கோப்பாய் வடக்கு விவசாயக் கிளையில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் பேசிய யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. சிவமுத்துலிங்கம் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில், யாழ். குடாநாட்டில் தற்போது தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுகின்றது எனவும் இதற்கு இப்பகுதி விவசாயிகள் தேவைக்கு அதிகமான நீரை உபயோகிப்பதே காரணமாகும் எனவும் குறிப்பிட்டார். “யாழ். குடாநாட்டில் வருடா வருடம் நாலரை அங்குல மழை பெய்துவருகின்றது. இந்நீர் நிலப்பரப்பெங்கும் வீணே விரயமாகின்றது. இந்நீரைத் தேக்கினால் விவசாயத்தேவைக்குப் பாவிக்கலாம்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

சங்க உப தலைவர் திரு. அ. சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கிளைக் குழுத் தலைவர் திரு. க. இ. குமாரசுவாமி பேசுகையில், இப்பகுதி விவசாயிகளின் சிறுதானியப் பயிர்ச் செய்கைக்குப் போதியளவு சோயா அவரை, பீற்றாட் போன்ற விதை தானியங்களை இறக்குமதி செய்து கொடுக்கவேண்டுமெனவும், இராசவீதிக்கு விரைவில் மின்சாரம் பெற்றுத்தரவேண்டும் எனவும் பிரிவு உதவி அரசாங்க அதிபரையும், விவசாய இலாகாவையும் கேட்டுக் கொண்டதோடு வெடி மருந்து விநியோகிப்பதற்கு அனுமதி தரும்படியும் கேட்டுக்கொண்டார்.

பிரிவு உதவி அரசாங்க அதிபர், மக்கள் வங்கி முகாமையாளர், பெற்றோலியம் கூட்டுத்தாபன விற்பனை முகாமையாளர் ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (அ)

......

### மல்லியை விற்க மறுத்தவருக்கு ரூ. 750 அபராதம்

யாழ்ப்பாணம், சனி

விஸ்வமடுவில் கொத்த மல்லியை வைத்துக்கொண்டு இல்லையென்று சொன்ன ஒரு கடைக்காரருக்கு 750 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது,

விலைக்கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர் திரு. என். சண்முகரத்தினம் தலைமையில் சென்ற அதிகாரிகள் இந்தக்கடைக்காரரைப் பிடித்தனர். கிளிநொச்சி நீதவான் எதிரிக்கு அபராதம் விதித்தார்.

......

### நாளை பாடசாலை இல்லப் போட்டி

யாழ்ப்பாணம். சனி

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெறவிருக்கிறது.

பாடசாலை அதிபர் திரு. க. சண்முகம் தலைமையில் மூத்தநயினார் கோவில் வீதியில் நடைபெறும் இப்போட்டியை கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் கொடியையேற்றி ஆரம்பித்து வைப்பார். தொழிலதிபர் திரு. க. கனகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (அ)

### ஈழத்துச்சிதம்பரம் ரதோற்சவம்

யாழ்ப்பாணம், சனி

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத் தீர்த்த உற்சவமான நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை தேவஸ்தான வித்துவான் அருட்கவி சீ.விநாசித்தம்பிபுலவரான் மடந்தைமணாளன் என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

காலையில் நடேசப்பெருமான் 3-ம் வீதி திருஉலாவருதல் உட்பட இரவு 10-30 மணி வரை விசேஷபூசை ஆராதனைகள் நடைபெறும். (அ)

.........

### வருடாந்த உற்சவம்

வேலணை, வெள்ளி

நயினாதீவு செம்மனத்தம் புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இம்மாதம் 14-ந் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

பத்தாவது தினத்தன்று ரதோற்சவமும் 4-ந் திகதி பூங்காவனத திருவிழாவுடன் நடைபெறவிருக்கின்றன. (இ)

### 300 புதிய பஸ்கள்

கொழும்பு, வெள்ளி

நாட்டில் மேலும் 300புதிய பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று இ. போ. ச. தலைவர் திரு.ஜே.வி. ரி. கொத்தலாவல தெரிவித்தார். (உ)

...

### விளையாட்டுப் போட்டி

கல்வியங்காடு, வெள்ளி

காரைநகர் பாடசாலைகளுக்கிடையிலான உப வட்டார விளையாட்டுப்போட்டி எதிர்வரும் புதன்கிழமை காரைநகர் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மூன்று பிரிவுகளுக்கிடையில் நடைபெறும் இப்போட்டியின் இறுதிப்போட்டியான வட்டுக்கோட்டை வட்டாரப்போட்டி மே மாத நடுப்பகுதியில் நடைபெறும். (உ)

...

### வலி. மேற்கில் விளையாட்டுப் போட்டி

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே மாபெரும் விளையாட்டுப் போட்டியொன்று ஏப்ரல் 30-ம் திகதி நடைபெறவுள்ளது. பெரும் தொகையான விளையாட்டுக் கழகங்கள் பங்கு கொள்ளும் இப்போட்டிக்கான ஏற்பாட்டை விளையாட்டு உத்தியோகஸ்த்தர் திரு. ஈ. சுப்பிரமணியம் கவனித்து வருகின்றார்.

இம்முறை பாடசாலைக் கழகங்களும் போட்டியில் பங்கு கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. (அ)

# எறும்புப்புற்றுக்குவைத்த தீ வீட்டையே எரித்தது

## மட்டுவிலில் சம்பவம்

மட்டுவில், வெள்ளி

எறும்புப் புற்றுக்கு மண்ணெண்ணை ஊற்றி வைத்த நெருப்பு, ஒரு வீட்டையும், அந்த வீட்டிலுள்ள பெருந் தொகையான பொருட்களையும் எரித்துச் சாம்பராக்கியது.

இச்சம்பவம் மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத் திற்கருகாமையில் நடைபெற்றது.

அந்த வீட்டில் வள்ளிப்பிள்ளை என்ற ஒரு மூதாட்டி மட்டுமே தனித்து வசித்துவந்தாராம். அவர் வீட்டினுள் எறும்பு புற்றெடுத்துப் பெருந் தொல்லை கொடுத்ததாம். எறும்பின் உபத்திரவம் தாங்க முடியாத இந்த மூதாட்டி, எறும்புப் புற்றில் மண்ணெண்ணையை ஊற்றித் தீயைவைத்தாராம். அது அவரின் வீட்டையே சாம்பராக்கிவிட்டது.

வீட்டினுள்ளிருந்த சுமார் 800 ரூபா பெறுமதியான பொருட்களும் எரிந்து சாம்பராயின. வீட்டில் பற்றிய தீயை அயலவர் அணைப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சி பலனளிக்கவில்லையாம்.

மூதாட்டி தெய்வாதீனமாக உயிர் தப்பினர். (உ)


வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்-ஜெயலலிதா
அன்னமிட்டகை

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினரிசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன், பாரதி
தங்கத் தம்பி

RIO (Jaffna) Daily 4 Shows Last Day
TONY CURTIS in
THE COUNT OF MONTE-CRISTO
From 4-4-77
THE AGE OF GALLANTRY (ACTION COMEDY)

ரீகல் (யாழ்ப்பாணம்)
முத்துராமன் — நாகேஷ்
ஜெயபாரதி நடித்த
தினசரி 2-30, 6-30, 9-45, மட்டும்
அனுபவி ராஜா அனுபவி
டைரக்ஷன்: கே: பாலசந்தர்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
சிவாஜி (இருவேடம்)
ஜெயலலிதா சுந்தரராஜன் நடித்த
தினசரி 4 காட்சிகள்
பாட்டும் பரதமும்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ். நகர்)
எம். ஜி. ஆர்—ஈ. வி. சரோஜா
நம்பியார்-எம். ஆர். ராதா நடித்த
தினசரி 4 காட்சிகள்
கொடுத்து வைத்தவள்

9-வது வெற்றி வாரம்!
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலுஜா
வீரப்பா - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

வின்ஸர் (யாழ். நகர்)
ஆனந்தன், குமாரி சச்சு
ஈ. வி. சரோஜா, அசோகன் நடித்த
தினசரி 4 காட்சிகள்
வீரத் திருமகன்
(புத்தம் புதிய பிரதி)

ராணி [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன் நடித்த
பாக்கியலட்சுமி

வெலிங்டன் [யாழ். நகர்]
முத்துராமன் ஃ சுஜாதா நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 [யாழ். நகர்]
சிவாஜி, கே. ஆர். விஜயா
பத்மினி நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
இருமலர்கள்
(புதியபிரதி)


# தவக்கால நற்சிந்தனை

"கர்த்தர் நம்மில் அன்புகூருகிற யாவரையும் காப்பாற்றி துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்"

சங்கீதம் (145 : 20)

இமயமலை போன்று செல்வமும், செருக்கும், தன்னிகரற்ற தனித்தன்மையும் பெற்றிருந்தாலும் ஆண்டவன் அருள் இல்லையேல் அவ்வளவும் பாழே, ஆஸ்தியையும் அரண்மனையையும், ஆணவத்தையும் வைத்துக்கொண்டு இந்த உலகில் வாழலாம். எத்தனைநாளைக்கு நாம் வாழமுடியும்? ஆனல் நமது ஆன்ம இளைப்பாறுதல் காலத்தில் அடையவேண்டிய இடத்துக்கு ஆண்டவனின் அருள் வேண்டுமே!

"பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்! என்னும் வார்த்தை உண்மையும், எல்லா அங்கீகரிப்பிற்கும் பாத்திரமானதுமாகும் என்றூர். ஆண்டவனின் அடியாரான கமாலியேசுவின் சீடர். பாவிகள் யார்? பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து உலகத்தில் வருவானேன். பாவிகள் யார் என்பதற்கு இப்பார் முழுவதுமே சாட்சி நிற்கிறது. பாவம் இல்லாத இடம் எது என்பதை நம்மால் கண்டு பிடிக்க முடியுமா? சிறிது நின்று தியானித்துப் பார்த்தால் பாவமேயன்றி மற்றேதும் இந்த ஊன் சரீரத்தில் விளக்கம் பெறமுடியாது என்பது நன்றாக புலனாகிறது. இது மிக மிகக் கேவலமான ஒரு சம்பவமல்லவா! இந்தப் பயங்கரப் படுபாதாளத்தில் நின்று தன்னைத்தானே விடுவித்துக் கொண்டவர் யார்? விடுவித்துக்கொள்ளும் வகை அறிந்தவர் யார்?

ஆண்டவர் கூறிய அறிவுரைகளை நாம் அறிந்தும் அறியாதவர்கள்போல் அவனிவாழ்வின் அந்தகார சூழலில் ஆனந்தக்கூத்தாடிக்கொண்டிருக்கிறோம். —ஞானஒளி

• • •

## தேர்த்திருவிழா இன்று

யாழ்ப்பாணம், சனி

மாதகல் புவனேஸ்வரி அம்மன் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெகிறது. நாளை தீர்த்தோற்சவம்நடைபெறும்.

ஒரு நூற்றூண்டு கடந்த இவ்வாலயத் தேர் நல்லநிலையில் இல்லாததால் புதிய தேர்ஒன்றை அமைக்க சபை ஒன்று நிறுவப்பட்டு அதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (இ)

• • •

## தீவுப்பகுதிக்கு உப- பஸ் டிப்போ

வேலணை, வெள்ளி

இலங்கைப் போக்குவரத்துச் சபை, தீவுப்பகுதியில் உப-பஸ் டிப்போ ஒன்றை அமைப்பதற்கான வேலைகளில் இறங்கியுள்ளது.

இதன் பிரகாரம் இ.போ.ச. யாழ். டிப்போவிலிருந்து கட்டிடப் பொறியியலாளர் திரு. செ. கைலாசபதியும் திரு. க. சிவபாதமும் தீவுப்பகுதிக்குச் சென்று மேற்படி உப-டிப்போ அமைப்பதற்கான இடத்தைப் பார்வையிட்டதுடன், காணிகள்பற்றிய விபரங்களையும் சேகரித்துச் சென்றுள்ளனர். (உ)


புலோலி சினிமாஸ
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
சனி, ஞாயிறு 10-30
சிவகுமார்-ஜெயசுதா
பட்டிக்காட்டு ராஜா


# யாழ். மாவட்ட புத்தாண்டு நாட்டுக் கூத்து விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ்.மாவட்ட புத்தாண்டு நாட்டுக் கூத்துவிழா, யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் அரசாங்கஅதிபர் திரு. டபிள்யூ ஏ.எல்.விஜயபாலா தலைமையில் இம்மாதம் 4-ம் தேதி மாலை நடைபெறவிருக்கிறது.

யாழ்.கலாச்சாரப்பகுதி அளிக்கும் இவ்விழாவில், 1976-ம்ஆண்டு யாழ்மாவட்ட நாட்டுக் கூத்துப் போட்டியில் முதல் பரிசு பெற்ற யாழ்.நவரசநாட்டியக் கூத்துக்கலாமன்றத்தின் சங்கிலியன் நாடகம் இடம் பெறும்,

1976-ல் யாழ்மாவட்ட நாட்டுக்கூத்துப் போட்டியில் 2ம் பரிசுபெற்ற வட்டுக்கோட்டை, நாட்டுக் கூத்து அபிவிருத்திக் குழுவின் சடாசுரன்வதையும், 1976-ம் ஆண்டு யாழ்மாவட்ட நாட்டுக்கூத்துப்பாட்டில் 3-ம் பரிசு பெற்ற பாஷையூர், தவன் தேசியகலா மன்றத்தின் வீரபாண்டிய கட்டப்பொம்மனும் இடம் பெறுகின்றது. (க-அ)

## இன்று இளவாலையில் திருப்பாடுகள் காட்சி

யாழ்ப்பாணம், சனி

இளவாலை புனித யாகப்பர் ஆலய அரங்கில் இன்றும் நாளையும் மாலை 'செந்நீரில் கண்ணொளி' என்ற தலைப்பில் நித்திய தேவமைந்தனின் நிர்மல காவியமான திருப்பாடுகளின் காட்சிகள் இடம் பெறும் இரு நாட்களிலும் காட்சிகளைக் காணவருவோர் வீடுதிரும்ப வசதியாக இ. போ. ச. கோண்டாவில் டிப்போவுடன் தொடர்பு கொண்டு பிரயாண வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. (அ)

## சாவகச்சேரி இந்து விளையாட்டுப் போட்டி

மட்டுவில், சனி

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி இன்று கல்லூரி அதிபர் திரு. பூ. வெற்றிவேலு தலைமையில் நடைபெறுகிறது.

மூதூர்ப்பகுதி நீதிபதி திரு. கனகசபை ஞானச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவார். திருமதி ஞானச்சந்திரன் பரிசில்களை வழங்குவார். (அ)

## இன்று ஆர். என். வெள்ளிவிழா

யாழ்ப்பாணம், சனி

'இந்துசாதனம்' ஆசிரியர் திரு. நம. சிவப்பிரகாசத்தின் சேவைநலன் பாராட்டுவிழாவும் வெள்ளிவிழாவும் இன்று மாலை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சைவபரிபாலனசபைத் தலைவர் திரு. ச. செல்வராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக பரமாசாரிய சுவாமிகள் தொடக்கிவைப்பார்.

சைவபரிபாலனசபைச் செயலாளர் திரு. சிற்றம்பலம் வரவேற்புரை நிகழ்த்துவார். நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் சாபில் ஆர். என்.கௌரவிக்கப்படுவார். நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம் உருவப் படத்தைத் திரைநீக்கம்செய்து வைப்பார். தொழிலதிபர் திரு. க. கனகராசா பதக்கம் சூட்டுவார். யாழ். வளாகத் தலைவர்பேராசிரியர் க.கைலாசபதி பாராட்டுரைவழங்குவார்.

'இன்டிபென்டன்ற்' ஆசிரியர் திரு. ஆர். எல். மைக்கேல், வெள்ளிவிழாமலர் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

திரு, கே. பி. ஹரன், திரு.க. சிவராமலிங்கம் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்.

திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், அ. அமிர்தலிங்கம், ஜனாப் எஸ். எச். எம். சஹீத் ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள். (க-அ)

## காயமுற்றூர்

வேலணை, வெள்ளி

இ.போ.ச. பஸ்ஸில் கடமையாற்றிக் கொண்டிருந்த காப்பாளர் ஒருவர் மிதிபலகையில் பிரயாணம் செய்கையில் காயமுற்ற சம்பவமொன்று பண்ணைப் பாலத்தில் நடைபெற்றது.

காலில்காயமுற்ற பிரஸ்தாப காப்பாளர் யாழ். அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

யாழ்ப்பாணத்திலிருந்து குறிகாட்டுவானுக்கு சென்ற பஸ் வண்டியில் கடமையாற்றிக் கொண்டிருந்த புளியங்கூடலைச் சேர்ந்தவரான திரு. செல்லத்துரை என்பவரே காயமுற்றவராவார். (இ)

# வானொலி, பத்திரிகைகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டெலிவிஷன், அரசாங்க சினிமா நிறுவனங்கள் நியாயமாக, சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்படும்.

நாட்டு நல்னுக்கு மிகவும் தேவையான குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தீவிரமாக அமுல்படுத்தப்படும். ஆனல் யாரும் இதற்காகக் கட்டாயப்படுத்தப்படாமல் தாமாக குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளவகை செய்யப்படுவதுடன் இதற்கான ஊக்கம் அளிக்கப்படும்.

கடந்த காலத்தில் புறக்கணிக்கப்பட்ட கிராமப்புர அபிவிருத்திக்கு முதலிடம் தரப்படும்.

கிராமப்புற வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு 5-வது ஐந்தாண்டுத் திட்டம் அகற்றப்பட்டு 6-வது ஐந்தாண்டுத் திட்டம் எந்த தாமதமும் இல்லாமல் கொண்டுவரப்படும்.

### 10 ஆண்டுத் திட்டம்

இந்தியாவில் ஏழ்மையையும் வறுமையையும் ஒழிக்க விரைவில் 10 ஆண்டுகாலத் திட்டம் கொண்டுவரப்படும்.

இந்த அரசின் பொருளாதாரக் கொள்கைகளையும் திட்டங்களையும் உள்ளடக்கிய புதிய பட்ஜெட் இந்த ஆண்டிதியில் தாக்கல் செய்யப்படும்.

## ஆனைக்கோட்டையில் மூடப்பட்டிருக்கும் ச. ச. நிலையம்

யாழ்ப்பாணம், சனி

ஆனைக்கோட்டை திருவள்ளுவர் சேவா மன்ற சனசமூகநிலையம் கடந்த பல நாட்களாக மூடப்பட்டுக்கிடக்கிறது. திறம்பட இயங்கிவந்த இந்நிலையத்தைகட்டிடம்அமைந்துள்ள நிலச்சொந்தக்காரர் தற்போது இயங்குவதற்கு முட்டுக்கட்டையாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

வாசிகசாலை மூடப்பட்டிருப்பது குறித்து இப்பகுதி வாசகர்கள் அதிருப்தி தெரிவிக்கிறார்கள். (அ)

• • •

## எழுவைதீவில் நாளை

எழுவைதீவு, சனி

எழுவைதீவு முத்தன்காடு ஸ்ரீமுருகப்பெருமான் தேவஸ்தான மணவாளக்கோலவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. கலைநிகழ்ச்சிகளும், விசேடமேளக் கச்சேரியும் நிகழும். சுதிர் சுந்தரலிங்கத்தின் இன்னிசையும் இடம்பெறும். (அ)

ஈழநாடு
The EELANADU

# யாழ்ப்பாணத்தில் அரசின் மக்கள் சந்தை

## விலைவாசியைக்குறைக்க அரசுஏற்பாடு

யாழ்ப்பாணம், சனி

விலைவாசி உயர்வைக்குறைக்கும் நோக்குடன் யாழ்ப்பாணத்தில் சுங்க இலாகாவிற்கு அருகில் மக்கள் சந்தை ஒன்று இம் மாதம் 9-ம் திகதி அரசாங்கத்தால் ஆரம்பித்துவைக்கப்படவிருக்கிறது.

மக்கள் நலன் கருதி ஒவ்வொரு சனிக்கிழமையும் இம் மக்கள் சந்தையை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடபகுதியில் உள்ள பல வர்த்தக நிலையங்கள் அங்கு பொருட்களை மலிவாக விற்பதற்கு முன்வந்துள்ளன. (க-அ)

# செல்வாவை சூரியர் சென்று பார்த்தார்

## உடல்நிலைபற்றி டாக்டரிடம் விசாரித்தார்

யாழ்ப்பாணம், சனி

**பத்து நாட்களாக மயக்கமுற்ற நிலையில், சிகிச்சை பெற்றுவரும் மூதறிஞர் செல்வநாயகத்தை நேற்றுக் காலை தபால் தந்தி தொடர்புகள் அமைச்சரும் வீடமைப்பு அமைச்சருமான திரு. செ.குமாரசூரியர் நேரில் பார்த்து அவரின் நிலைமைபற்றி அறிந்து கொண்டார்.**

நேற்றுக்காலை 9-30 மணிக்கு யாழ். பெரியாஸ்பத்திரி 16-ம் வாட்டிற்கு வந்தஅமைச்சர் திரு குமாரசூரியர் டாக்டர்களுடன் மூதறிஞர். செல்வாவின் உடல்நிலை பற்றிகேட்டறிந்ததுடன், குளிரூட்டப்பட்ட அறைக்குள் சென்று தந்தை செல்வாவை பார்வையிட்டார்.

திரு. குமாரசூரியர் வந்த சமயம், அங்கு திருமதி செல்வநாயகமும் இருந்தார். மூதறிஞர் செல்வாவைப் பார்த்த பின் வெளியில் வந்த அமைச்சர் குமாரசூரியரிடம் தந்தை செல்வாவின் உடல்நிலை அபிவிருத்திபற்றி தெரிவிக்கப்பட்டது.

நேற்றும் பலர் ஆஸ்பத்திரிக்கு வந்து தந்தை செல்வாவின்உடநிலைப்பற்றி கேட்டறிந்துசென்றனர். அவரின்உடல்நிலை நாளுக்கு நாள் அபிவிருத்தி அடைந்து வருகிறது.

மூக்குத்துவாரத்தின் ஊடாக குழாய்மூலம் காப்பி, மற்றும் நீர்ப்பதார்த்தங்கள் கொடுக்கப்பட்டு வருகிறது. [க]

# 'உடல் நலம்தேறி எம்மை வழிநடத்திசெல்லவேண்டும்'

## எம். பி. தங்கத்துரை பிரார்த்தனை

கொழும்பு, வெள்ளி

மூதறிஞர் செல்வநாயகத்தைக் குணமடையச்செய்வதற்காக பிரபல வைத்திய நிபுணர்கள் பலர் அயராது உழைத்து வரும் இவ்வேளையில் செல்வா உடல்நலம்வேண்டி லட்சோப லட்சம் மக்கள் வேறுபாடுகளை மறந்து பிரார்த்தனை செய்துவரும்வேளையில், தமிழ் மக்களின் எதிர்காலம் சுபிட்சமடைய தந்தை செல்வா உடல்நலம் தேறி எம்மை வழிநடத்திச் செல்ல வேண்டும் என்று நாமும் பிரார்த்திக்கின்றோம்.

இவ்வாறு மூதூர் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. அ. தங்கத்துரைகொழும்பு சம்மாங்கோட்டார் மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற விசேஷ பிரார்த்தனையின்போது கூறினார்.

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட இவ்விசேட பிரார்த்தனையில் தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ் இளைஞர்பேரவை, தமிழ் மகளிர் பேரவை ஆகியவற்றைச் சேர்ந்த பலரும் பொது மக்களும்கலந்து கொண்டனர்.

சாவகச்சேரி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினமும் கலந்து கொண்டார். (ம-இ)

# 'சகல மதத்தவரும் மதிக்கும் தலைவர்'

## மூதறிஞனர் பற்றி பொன். சத்தியசீலன்

கல்வியங்காடு, வெள்ளி

"மூதறிஞர் செல்வநாயகம் வாழ்ந்துகொண்டிருக்கின்றஇந்த் காலகட்டத்திலேயே தமிழ் இளைஞராகிய நாம் தமிழ் ஈழத்தை அமைத்திடுவோம் என உறுதி பூணவேண்டும்" என்று கோண்டாவில் பிள்ளையார்கோவில் முன்றலில் நடந்த தந்தை செல்வாவுக்கான பிரார்த்தனைக் கூட்டத்தில் சிறை மீண்ட பொன். சத்தியசீலன் பேசும்போது தமிழ் இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "1947ம் ஆண்டிலிருந்து தமிழர்கள் இந்த நாட்டில் தமிழர்களாக வாழ்வதற்கு அயராது முயற்சிகள் செய்து வருபவர் தந்தை செல்வா. அவரின் தலைமையை ஈழம்வாழ் தமிழர் மட்டுமன்றி வெளியுலகில் வாழும் தமிழர்களும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

"மதத்தால் கிறிஸ்தவராக இருந்தபோதிலும் இன்று, இந்துக்களும் இஸ்லாமியரும் மற்றும் ஏனைய மதத்தவரும் அவரின் பிறந்த தினத்தில் அவர் பூரண சுகத்துடன் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறி எம்மை வழிநடத்தவேண்டும் என்று பிரார்த்திக்கின்றனர். எமது பிரார்த்தனையை இறைவன் ஒருபோதும் தட்டிக்கழிக்க மாட்டான் என்பதில் நாம் நம்பிக்கை உடையவர்களாக இருப்போம்.

"1970ம் ஆண்டுத் தேர்தல் முடிந்தபின் தந்தை செல்வா பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் 'தமிழனை இனி ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்' என்று கூறினர். அந்தத் தீர்க்கதரிசியின் வார்த்தை என்றும் பொய்த்ததில்லை. ஆண்டவனில் அழியா நம்பிக்கை வைத்திருக்கும் தந்தை செல்வா வழி சென்று தமிழ் ஈழம் அமைப்பதற்குப் போராட ஒவ்வொரு தமிழனும் குறிப்பாக இளைஞர்கள் பங்கேற்கவேண்டும்" என்றார்.

இவ்வைபவத்தில் திரு. மு. ஆலாலசுந்தரமும் மற்றும் இளைஞர் பேரவை அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர். (உ)

# வாலிபரைக்கரடி வேட்டையாடியது

## முகம்சிதைந்தநிலையில் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், சனி

கரடி ஒன்றினால் கடித்துக் குதறப்பட்டு, முகத்தின்பெரும் பகுதி கீறிக்கிழிக்கப்பட்ட நிலையில் வாலிபர் ஒருவர் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

முள்ளியவளையைச் சேர்ந்த எஸ். கணேஷ் (வயது 24) என்ற வாலிபரே இப்பயங்கர கரடிக் கடிக்கு இலக்கானவராவார்.

சம்பவதினம் மாலை காட்டிற்குச் சென்ற சமயம் கரடி பாய்ந்து, பாய்ந்து இவரைக் கடித்துக் குதறியிருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

இவருக்கு நேற்றுப்பகல் யாழ். பெரியாஸ்பத்திரியில் அவசர சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

இவருக்கு உயிர் ஆபத்து எதுவும் இல்லை என்ற போதிலும் இவரது விழிகளைக் காப்பாற்றும் சிகிச்சைநடைபெற்று வருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள்தெரிவித்தன.

தாம் காட்டுச்சுச் சென்றதற்கான காரணம் பற்றி வாயால் கூறமுடியாத நிலையில் இவர் இருந்து வருகிறார்.

# பருவா ராஜினமா!

புதுடில்லி, ஏப். 1

காங்கிரஸ்தலைவர் பருவா ராஜினமாச் செய்துவிட்டார். காங்கிரஸ்தலைவரும் மற்றும் பல் மூத்த உறுப்பினர்களும் கட்சியிலிருந்து வெளியேற்றப் படவேண்டுமென்றகோரிக்கை தேர்தலுக்குப் பின்னர் வலுவடைந்து வந்தது தெரிந்ததே.

முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் புதல்வர் சஞ்சய் காந்தி நேற்று ராஜினமாச் செய்திருந்தார். அத்துடன் காரியக்கமிட்டியும்ராஜினமாச் செய்ய முடிவுசெய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஆ)

# 7-ம் திகதி பென்சன் கிடைக்கும்

கொழும்பு, வெள்ளி

இம்மாதம் 7.ம திகதி சகல பென்ஷன்காரர்களுக்கும் பென்சன் வழங்கப்படவுள்ளது இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டது.

புதுவருடத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கை என்று தெரிவிக்கப்பட்டது. (ஆ)

# பிரார்த்தனை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோயிலில் பெரியார் எஸ். ஜே. வி. அவர்களின் தேகநலனுக்காக, அவரது பிறந்தநாளன்று விசேஷபூசையும் வழிபாடும் நடைபெற்றது. திருப்பூங்குடி ஆறுமுகம் அவர்கள் தேவார பதிகங்கள் ஓதினர்.

# சுன்னாகம் ஐயனார் தேர் இன்று!

சுன்னாகம், சனி

சுன்னாகம் ஐயனார் கோவில் தேர்த்திருவிழா இன்றும் தீர்த்தத்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவிருக்கின்றன. (உ)

# ஆயுர்வேத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்யுமாறு பொதுச்சேவைச் தொழிற்சங்க சம்மேளனம் கேட்டுள்ளது.

செயலாளர் திரு. க. நவரத்தினம் சுகாதாரஅமைச்சருக்கு இது சம்பந்தமான மகஜரை அனுப்பியுள்ளார்.

# உபதபால் அதிபர்களுக்கு கடனுதவி

யாழ்ப்பாணம், சனி

உப-தபாலதிபர்களுக்கு வங்கிக் கடன் வழங்குததற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தபாலமைச்சு அகில இலங்கை தமிழ் பேசும் உப-தபால் அதிபர்கள் சங்கச்செயலாளர் திரு. ஐ. நடராஜாவுக்கு அறிவித்துள்ளது.

இது பற்றிய அமைச்சின் சுற்றுநிருபம் வடபகுதி தபால் அத்தியட்சகருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வங்கிக்கடனகோரும் விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு திரு. நடராஜா உப-உப-தபாலதிபர்களை கேட்டுக் கொண்டுள்ளார். (உ)

# சங்கத்தின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விரும்பவில்லையென்றும், ஆயினும் தங்கள் கோரிக்கை நிறைவேறும் வகையில் இத்தீர்மானத்தை எடுக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டதென்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# அமைச்சருக்கு புகார்

யாழ். மாநகர ப. நோ. கூ. ச. நிர்வாகம் பற்றி முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. தம்புகந்தையா கூட்டுறவு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிற்கு கடிதமொன்று அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில்கூறப்பட்டிருப்பதாவது; கூட்டுறவு சங்க கிளைகள்மூலம், விநியோகிக்கப்பட வேண்டிய லக்ஸபிரே, புடவை உட்பட மற்றும் பொருட்களின் விநியோகம் சீர்கேடான முறையில் நடைபெறுகிறது. நிர்வாகம் தாம் விரும்பிய சிலருக்கே மேற்படி பொருட்களை விநியோகம் செய்வதுடன் தாங்கள் விரும்பிய தனிப்பட்ட வியாபாரிகளுக்கு கொடுக்க கூடாதென கட்டுப்பாடு இருந்தும், பொருட்களை கூடியவிலைக்கு விற்றுவருகின்றனர்,

# மொரார்ஜியை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துவதில் தாம் முழுமூச்சுடன் செயற்பட்டதாகவும், ஆனால் தற்போது முன்னைய தமது கொள்கையை மாற்றிவிட்டதாகவும், இலங்கை, இந்தியா, இஸ்ரேல் பெண் பிரதமர்களாலேற்பட்ட அனுபவங்களினால் இந்நிலைக்குத் தாம் தள்ளப்பட்டதாகவும், பிரதமராக இருந்த இந்திரா ஒரு பிசாசு என்றும் மொரார்ஜிதேசாய் கூறியிருந்தார்.

## ஊழல்பற்றி ஆராயக்கமிட்டி

வஞ்சம் தீர்ப்பு நடவடிக்கையாக எதுவும்எடுக்கப்படமாட்டாது என்றும், லஞ்சம்சம்பந்தமாக கிடைக்கப்பெறும் புகார்கள் உடனுக்குடன் கவனிக்கப்படுமென்றும் பிரதமர் தெரிவித்தார். முன்னைய அரசில் அங்கம் வகித்த உயர்அதிகாரிகளின் நடத்தைகள் குறித்து ஆராய கமிட்டி ஒன்று நியமிக்கப்படுமென்றும் சபையில் அறிவிக்கப்பட்டது. (ஆ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O. Box 49, Jaffna) Telegram: Eelanadu. Telephone 389. Registered as a Newspaper in Sri lanka.